திராவிடநாடு

3-7-60 | வார வெளியீடு | விலை 1[illegible] [illegible]

ஏற்றம் வேண்டும்

[இரா—கோவிந்தராசன்]

செந்தமிழே! நமதுயிரே! என்ற உணர்வோடு
செழுந்தமிழாய்ச் செந்தமிழைச் செய்திடவும் வேண்டும்!
சந்தனமே! சவ்வாதே! என்ற தமிழ்மணத்தைச்
சந்தெ(ல்)லாம் பரப்பிடவே நாம்முந்த வேண்டும்!
விந்தியமே! நமதெல்லையே! எனும் உரிமையோடு
விற்புலியை அதன்றலையில் பொறித்திடவும் வேண்டும்!
பந்தெனவே உந்துமுளம், திராவிடர்க்கு வேண்டும்;
பாய்புலிபோல் நெஞ்சுரமும் தோள்வலியும் வேண்டும்.

கனிச்சாறே! கற்கண்டே! என்ற தமிழினிமை
காதினிலே தேனாய்ப் பாய்ந்திடவும் வேண்டும்!
பனிமலரே! வெண்ணிலவே! என்ற எழிலோடு
பந்தாடும் தமிழதனைச் சிந்தைசெய வேண்டும்!
தனித்தமிழே! என்மூச்சே! என்ற நிலைவேண்டும்;
தனித்தமிழில் மணிப்பவளம் கலவாமை வேண்டும்!
இனிக்கின்ற எந்தமிழே! முத்தமிழே! வேண்டும்;
எந்நாடும் அதன்சுவையால் ஏற்றமுற வேண்டும்!

சமநோக்கு வேண்டும்

அரசியலாதிக்கத்திலும், தொழிலாதிக்கத்திலும் தென்னகத்தை அடக்கி ஆளும் வடவராட்சியை எதிர்த்து, பக்கம் பக்கமாய்ப் பல கோணங்களில் எழுதியும், பலப்பல மேடைகளில் பேசியும், பண்ணமைத்து இசையாகப்பாடியும், தசையிலுள்ள நரம்பெல்லாம் முறுக்கேறும் வீரக்கவிதைகளின் வடிவமாய் ஆக்கியும்; நாடகமாய் ஆடியும், உரத்த குரலெழுப்பி வடவருக்கும் வடவராதிக்கத்திற்கும் கண்டனக்கணைகளை ஏவியும்; உயிரை ஒரு பொருட்டாக மதியாது போர்க்களம் அமைத்துப் போராட்டங்களை நடத்தியும் விளக்கம் தந்துவந்திருக்கிறது—விளக்கிக்கொண்டேயிருக்கிறது தி. மு. கழகம்.

வீசும் காற்றினால் உந்தப்பட்டு ஓடிவரும் கார்முகிலோ, ஒளிவீசும் வெண்மதியை மறைத்துக்கொண்டு, "வெண்ணிலவை அழித்துவிட்டேன்; தண்மதியால் இனியேது உங்களுக்கு துன்பம்; அதுதரும் ஒளியெல்லாம் அனல் வீசும் தன்மையது! அதைத் தடுத்த என் செயலுக்கினியென்ன தரப்போகிறீர்?" என்றுரைத்த கார்முகிலைப்போல், தென்னகத்துத் துன்ப இருள் போக்கி இன்ப ஒளிபரப்ப விளக்கிவரும் தி. மு. கழகத்தின் உண்மை உருப்பெற்ற வெண்மதியாம் விளக்கங்களை மறைத்துவிட, ஆளும் வானத்தில் பவனிவரும் அதிகார வெண்மேகக் கூட்டத்தார் பதவி என்ற காற்றினால் உந்தப்பட்டு உதிர்க்கும்வார்த்தைகள்பல. பதவி என்ற காற்றைப், பரக்கப்பரக்க ஓட்டி படுபாதாளத்தில் அமிழ்த்திவிட்டால். உருத்தெரியாமல் சிதறடித்துவிட்டால் அப்போது என்ன சொல்லுமோ அதிகார வெண்மேகக்கூட்டம்; அதை நாம் அறியோம்!

மதியை மறைத்துவிட்டுச் சதிபுரியும் மேகக்கூட்டம். மதியை அழித்த கதையையோ, அல்லது காலாகாலமாய் மதியை மறைத்த கதையையோ எவரும் கேட்டிருக்க முடியாது. அதுபோலவே தி. மு. கழகத்தின் உண்மையான விளக்கங்களைத் தங்களின் பிரசாரத்தால் மறைத்துவிட்டுக்கோலொச்சமுயன்றுலும் பலப்பல சமயங்களில்

சி. பெரியண்ணன்

ஆளும் அதிகாரவர்க்கத்தாரின் வாயிலிருந்து உண்மை வெளிப்பட்டு உதிர்ந்துவிடுகிறது. ஆனால் நம் மாநிலத்து மந்திரிகளின் வாயிலிருந்து, 'வடக்கு வாழவில்லை, தெற்குத்தேயவில்லை' என்ற மறுப்புரைதான் உதிர்கின்றன.

ஐந்தாண்டுத் திட்டங்களால் வடநாடு தொழிலில் வளம் பெற்றுவருகிறது. தென்னகத்தில் சிறு மூலதன உதவாக்கரைத் தொழில்களைத்தான் நம்மால் காணமுடிகிறது. அதோடு தமிழகத்தில் பல தொழில்கள் தனியார் முதலீட்டுடன் சர்க்காரும் இணைந்தோ, அல்லது தனியார் துறையிலோதான் இயங்கி வருகிறது. இந்நிலைக்கு ஐந்தாண்டுத் திட்டங்கள் ஏன்? அதற்காக ஒதுக்கப்படும் கோடி கோடியான ரூபாய்களும் ஏன்? தேவையில்லையல்லவா!

வடநாட்டில் வளங்களில்லா போனாலும் சரி, வசதியில்லா போனாலும் சரி, பல தொழில் தி டங்களைத் தீட்டி, அதற்குப் ப கோடி ரூபாய்களைக் கொட்டி அ நாட்டைத்தொழில்கொழிக்கும் வ நாடாய்ஆக்கிவருகிறார்கள். ஆன தென்னகத்தில் வளங்களுண் ஆனால் வகைப்படுத்தத் தொழி திட்டங்கள் இல்லை.

வடக்கிழைக்கும் ஓரவஞ்சனை மறைக்க நம் தமிழகத்து அ மேடையில் உலவிடும் அமைச் களோ, பல நொண்டிச்சாக்குகளை கூறிவருகின்றனர். 'வடக்குச் செ வது நியாயமானதே' என்று வ காலத்துவாங்கி வாதாடுகின்றன அதோடு எதிர்தரப்பினரை வ மொழியாமலும் விடுவதில்லை.

ஆனால், உண்மை நிலை என்ன வடக்கு, பல துறைகளிலும் வள பெற்றுக்கொண்டுதானிருக்கிறத தெற்குத் தேய்ந்துக்கொண்டுதா போகிறது. இதை உணரா அமைச்சர்களுக்கு நம் கூற்று உ லெல்லாம் அனலாக வீசுகிற போலும்! நாம் விளக்கம் தந்தா அவர்களுக்கு வயிற்றெரிச்சல் ஏ பட்டுவிடுகிறது. அவர்களி கூடாரத்திற்குள்ளிருப்போரே, அ லும் அவர்களைப்போல அமைச ராகஇருப்பவரே, ஒருவர் கூறினா அக்கூற்றை எப்படி ஏற்றுக்கொ ளாமல் போய்விடுவார்கள்? ந கூற்றுக்கு மறுப்புரை வழங்கு நம் மந்திரிகள், நம் கருத்தை எடுத்துக்காட்டிப் பேசும் அ ருக்கு என்ன மறுப்புரை தருவா களோ தெரியவில்லை!

(4-ம் பக்கம் பார்க்க)

8 | ஆண்டுச் சந்தா ரூ. 8. (3—7—60) தனிப் பிரதி 16-காசு [இதழ் 51

எங்கும், எதிலும்.

"வடக்காவது தெற்காவது—அதெல்லாம் ஒன்றும் இல்லை. எல்லாம் இவர்கள் பேசும் வடக்குத்தான்" — காங்கிரஸ் அமைச்சர்கள் அலட்சியமாக இப்படிப் பலமுறை பேசியிருக்கின்றனர்; பேசுகின்றனர். ஆனால் அவர்கள் அப்படிப் பேசிவிடுவதால் வடக்கும் தெற்கும் ஒன்றாகிவிடுகிறதா எனின், இல்லை. மாறாக ஒவ்வொரு துறையிலும் இந்த 'வடக்கு-தெற்கு' இருக்கத்தான் செய்கிறது. இருப்பதோடு, இன்னல்பல விளைக்கின்றது. இதனை நாளுக்கு நாள் ஒவ்வொருவரும் நன்கு உணரத் தலைப்பட்டுவிட்டனர். உணர்ந்தவர்களிலே பலர் வெளிப்படையாகவும் எடுத்துச்சொல்லத் துணிந்துவிட்டனர்.

கோவை நகரத்தைத் தொழில் நகரம் என்று சொல்கிறோம்; பெருமையும் கொள்கிறோம். தமிழகத்தின் பிற பகுதிகளை ஒட்டி நோக்கும்போது அது ஓரளவுக்கு உண்மைதான். ஆனால் அண்மையில் அங்கிருந்து வந்துள்ள செய்தி ஒன்று நாட்டு நிலையைத் தெளிவாக்குகின்றது. வடக்காவது தெற்காவது என்ற அலட்சியப்போக்கில் உள்ளோரை விழிப்படையச் செய்கின்றது.

அந்தப் பகுதியில் அமைந்துள்ள வார்ப்படத்தொழிற்சாலைகள் பல தேனிரும்பு கிடைக்காத காரணத்தினால் மூடிவிடப்படக்கூடிய நிலையில் உள்ளன என்று அந்தச் செய்தி கூறுகின்றது. வார்ப்படத் தொழிலுக்குத் தேனிரும்பு இன்றியமையாதது-பணியாரத்துக்குமாபோல்! ஆனால் தேனிரும்பு வடக்கேயிருந்து வர வேண்டும். வடக்கேயிருக்கும் தொழிற்சாலைகளோ 'வடக்காவது தெற்காவது எல்லாம் ஒரே இந்தியாதான் — எனவே கோவையின் தேவையை நிறைவேற்றுவோம்'என்று 'பெரிய' மனதுவைத்து எண்ணாமல் 'குறுகிய' நோக்கோடு வடக்கே உள்ள தொழிற்சாலைகளுக்கே தங்கள் தேனிரும்பு சென்று சேரும்படி செய்கின்றன. அதனால் இங்கே உள்ள தொழில் நசிக்கின்றது. ஆனால் நமது அமைச்சர்களோ 'எங்கிருந்தால் என்ன?' என்று கேட்கின்றனர்,

அங்கிருப்பதினால் நமக்கு ஏதும் நன்மையில்லை; இங்கு இருந்தால்தான் நல்லது என்று நாம் எடுத்துச்சொன்னால், இவர்கள் பிரிவினை மனப்பான்மை கொண்டவர்கள் என்று எளிதில் ஒதுக்கித் தள்ளிவிட எண்ணுகின்றனர்.

உண்மை அவ்வளவு சுலபமாக அழிவது இல்லை; மறைவதும் இல்லை. மூடி மறைக்க மறைக்க முழு வேகத்தோடு வெளிவருகின்றது. அமைச்சர் பக்தவத்சலம் அவர்களே காஞ்சிபுரம் பிச்சைக்காரர் விடுதியைத் திறந்துவைக்கின்றபோது "பம்பாய், டெல்லி போன்ற வடநாட்டு நகரங்களில் நம்முடைய தமிழர்கள் பலர் பிச்சைக்காரர்களாக இருக்கிறார்கள்" என்று குறிப்பிட்டார். அடிக்கடி செல்லுகின்ற இடமானாலும் பம்பாயும் டெல்லியும் வடநாட்டு நகரங்கள் என்பதும், தமிழர்கள் நம்முடையவர்கள் என்பதும் அமைச்சராலேயே மறைக்கவோ, மறக்கவோ இயலவில்லை.

'பிலிம்' தொழிலில் ஈடுபட்டுள்ளோரும் வடக்கிற்கும் தெற்கிற்கும் உள்ள வேறுபாடுகளைச் சுட்டிக்காட்டுகின்றனர். வடக்கேயுள்ளவர்கள் இழைக்கும் கொடுமைகளையும், அநீதிகளையும் எடுத்துக்காட்டுகின்றனர்.

எந்தத் துறையிலும் இந்த வேறுபாடு இருக்கின்றது. வடக்கு வடக்குதான் என்பதையும் தெற்கு தெற்குத்தான் என்பதையும் உணருகின்றவர்கள் தொகை வளருகின்றது. இன்னும் சிலருடைய உள்ளங்களில் அந்த உண்மை இடம் பெறவில்லை. அவர்களும் உண்மையை உணரச்செய்வதும், உணர்ந்த பின்னர் உறுதிகொள்ளச் செய்தும், உறுதி கொண்டபின் செயலில் இறங்கச் செய்வதும் நம்முடைய பணி.

அதனை வெற்றியோடு செய்து முடித்ததும் நமது நாடு நமதாகும் என்பதிலே ஐயம் இல்லை.

2-ம் பக்கத் தொடர்ச்சி

"மத்திய அரசாங்கத்தின் தொழில் திட்டங்களைப் பொறுத்தமட்டில், குறிப்பாக உருக்கு உற்பத்திச் சாலைகள் ஏற்படுத்தும் விஷயத்தில் பிராந்திய ரீதியான சமநோக்கு மத்திய அரசினரால் கைக்கொள்ளப்பட வில்லையென்று தென்னிந்தியர்கள் தெரிவித்து வருவது சரியான கருத்தேயாகும்."

என்று ஆந்திர சிறுதொழில், குடிசைத் தொழில் இலாகா மந்திரி திரு. கொண்டா இலட்சுமணன் அவர்கள் கோவை ரோட்டரி கிளப்பில் பேசுகையில் குறிப்பிட்டுள்ளார்.

"சமநோக்கு மத்திய அரசினரால் கைக்கொள்ளப்படவில்லை."

இந்த வாசகத்தில் உள்ள சரியான கருத்தைப் புரிந்துகொள்ளும் ஆற்றல் இல்லாதவர்கள், அரசியலுக்கு இலாயக்கானவர்களல்ல என்ற முடிவான கட்டத்தை அடைவதில் தவறு ஒன்றும் ஏற்பட்டுவிடாது. சமநோக்குக் கொள்ளாத அரசு என்றால், ஒர வஞ்சனை அளிக்கும் அரசு, பாரபட்ச ரீதியான அரசு, நீதியற்ற அரசு, நேர்மையற்ற அரசு, சர்வாதிகார அரசு, சமத்துவம் வழங்காத அரசு, என்பதைத் தவிர, அதற்கு வேறென்ன பொருளை நாம் கூற முடியும்.

வடநாட்டுச் சர்க்கார் சமநோக்கு இன்றிச் சர்வாதிகாரப்போக்கில் செய்வதைத் தென்னகத்தில் எடுத்துக்கூறி வரும் கட்சி தி.மு. கழகத்தைத்தவிர, வேறு எந்தக் கட்சியும் இல்லை என்பது நாடறிந்த செய்தியாகும். தி. மு. கழகத்தின் கூற்றை ஒப்புக்கொள்ளும், அல்லது அதற்கு ஊன்றுகோல் தரும் முறையில் தான, "தென்னிந்தியர்கள் கூறி வருவது சரியான கருத்தேயாகும்" என்று மந்திரி மனம்விட்டுப் பேசியுள்ளார்.

மத்தியப் பேரரசு வடநாட்டில் பலப்பல ஆலைகள் பல கோடி செலவழித்து நிறுவிவரும் செயலைக் கண்டித்துக் கூறிவரும் நம்மைப் பார்த்து, நம் மாநிலத்து அமைச்சர்கள் வசைமாரி பொழிந்து வருகின்றனர். 'பொய்' என்று கூறி மறைத்து மக்களை நம்பச் செய்கின்றனர். நாம் கூறினால் தான் பொய், ஆனால் ஆந்திர அமைச்சர் கூறுகிறார்.

"தென்னிந்தியாவில் பெரிய அளவில் உருக்குத் தொழிற்சாலைகளை ஏற்படுத்துவது சாத்தியமில்லாமல் போய்விட்டாலும், கோடானுகோடி ரூபாய்களைச் செலவழித்து பிற பகுதிகளில் பிரம்மாண்டமான உருக்குத் தொழிற்சாலைகளை நிர்மாணிப்பதைவிடுத்து நாடெங்கும் பரவலான முறையில் சிறு அளவில் உருக்குத் தொழிற்சாலைகளை ஏற்படுத்தவேண்டும்."

தென்னகத்தில் பெரிய அளவில் உருக்குத் தொழிற்சாலைகளை அமைப்பதற்குத் தகுதியான இடங்கள் பல இருக்கின்றன, ஆனாலும், வடநாட்டுச் சர்க்காருக்கு நடுநிலைமையில் நிற்கச் சாத்தியமில்லாமற் போய்விடுகிறது. இருந்தாலும்சிறு அளவு தொழிற்சாலைகளையாவது அமைக்கக்கூடாதா? என்றுதான் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். இதோடு மட்டும் அவருடைய உள்ளத்து எழுச்சி அடங்கிவிடவில்லை. பின்னும் தொடர்ந்து:

"பிற பகுதிகளில் கோடானு கோடி ரூபாய்களைச் செலவழித்துப் பிரம்மாண்டமான உருக்குத் தொழிற்சாலைகளை நிர்மாணிப்பதை விடுத்து......"

என்பதிலுள்ள 'பிற பகுதிகள்' எந்த நாட்டைக் குறிக்கிறது? தெற்கின் நலிவைக்கூறும் அமைச்சர், வடக்கின் வளர்ச்சியைத்தான் அங்கே சுட்டிக்காட்டியுள்ளார். வடநாட்டில் உள்ள தொழிற்சாலைகளுக்கும் தென்னாட்டில் உள்ள தொழிற்சாலைகளுக்கும் எவ்வளவு ரூபாய்களைச் செலவழித்துள்ளார்கள்? வடக்கில் அமைத்துள்ள தொழிற்சாலைகளின் எண்ணிக்கையும், அமைக்கத்திட்டமிட்டுள்ளவைகளின் எண்ணிக்கையும், அதே போன்று தென்னகத்துத் தொழிற்சாலைகளின் எண்ணிக்கையும் அமைச்சர் அறியாதவரல்ல.

கோடானுகோடி ரூபாய்களை செலவழித்துத் தொழிற்சாலைகள் அமைத்துள்ள வடதேசத்தை கண்ணுற்ற அமைச்சர், தொழிற்சாலைகளின்றி வெறிச்சென காணப்படும் தென்னகத்தை பார்க்கிறார்! ஆச்சரியமும் வேதனை யும் அவருள்ளத்தை ஆட்டி படைக்கின்றன.

ஆமாம்! வடக்கில் பிரம்மாண்டமான உருக்குத் தொழிற்சாலை களைக் காணுகிறார்; அவைகளுக் குச் செலவழித்துள்ள ரூபாய்களை யும் ஒருகணம் எண்ணிப் பார் கிறார். கொஞ்சநஞ்சமல்ல கோடானுகோடி ரூபாய்களை செலவழித்துக் கட்டப்பட்டுள்ள பிரம்மாண்டமான உருக்கு தொழிற்சாலைகள்! ஆனால் இங்கே சிறு அளவு உருக்குத்தொழி சாலைகூட அமைக்கவில்லை அமைப்பதற்குத் திட்டமும் இல்லை யாது. என்னசெய்வார் அமைச்சர் மனம் வெதும்பி உள்ளம் திறந்து உண்மையை உதிர்த்துள்ளார். உண்மையிலேயே அவருக்கு நா நன்றி செலுத்தவேண்டும்.

மற்றும் ஒன்றை இங்கே கூ ஆசைப்படுகிறோம். "தென்னி தியாவில், 'தென்னிந்தியர்கள் என்ற வார்த்தைகளிலுள்ள ப உணர்ச்சி எண்ணிப்பார்ப்போர் நன்கு விளங்கும். 'கன்னட கருதவில்லை, ஆந்திரம் ஆதரிக் வில்லை, மலையாளம் ஏற்கவில் என்போருக்கு இவ்வார்த்தைக ஒரு சவுக்கடியாகும். தென்னாட் தொழிற்சாலை அமைக்க மராட் யனோ, அல்ல குஜராத்தியோ, அ லது வங்காளியோ ஏன் கவலை படப்போகிறான். அவர்களுக்கு திராவிடர்களுக்கும் என்ன உற இருக்கிறது. உறவுள்ளவர்க தானே உறவினனைப்பற்றிக் கவலை படவேண்டியிருக்கிறது. நான் மொழி மக்களும் உறவுக்காரர் வர்கள். அவர்களின் நாடு தெ னாடு. என்ற உண்மையான தத் வத்தையும் கூறியுள்ள அமைச் ருக்கு மீண்டும் ஒருமுறை நன் செலுத்துவோமாக!

காஞ்சீபுரம்

3 7-60

தம்பி!

ஆணை பிறந்துவிட்டது, அணிவகுப்புகள் தயாராகட்டும் என்று சென்ற
கிழமை எழுதியதை, நீ, படித்து, உன 'பங்கு' குறித்துத் திட்டமிட்டுக்கொண்டிருந்த
போது, நான், நெய்தல் நிலக் காட்சிகளைக்கண்டு களித்துக்கொண்டிருந்தேன். என்ன
துணிவு அண்ணா! உனக்கு; இதைச் சொல்ல. போர்க்கொடி உயர்த்தியாகிவிட்டது
என்று நாவலர் அறிவித்துவிட்டார். போராட்டக்குழு அமைக்கப்பட்டாகிவிட்டது,
பரணிபாடி வருகின்றனர் கழகத்தவர், எங்கணும்; இந்த நேரத்தில், நெய்தல் நிலம்
காணவா செல்கிறாய்? சென்றதுடன், அதை என்னிடம் செப்புகிறாயே,
சரியா? பாசறை காணவும் பாடி வீடமைக்கவும் செலவிடவேண்டும்
நேரத்தை. நெய்தல் காணும் நேரமா இது!!—என்று
கோபித்துக்கொள்கிறாயா, தம்பி! நெய்தல் நிலம் சென்றேன், கண்டேன்,
களிப்புமிகக்கொண்டேன்; ஆனால் அந்த நேரத்திலும், அந்த இடத்
திலுங்கூட, உன்னையொத்தவர்கள், எத்துணை உற்சாகத்துடன், எழுச்சி
யுடன், மொழிகாத்திடும் ஆர்வத்துடன் உள்ளனர் என்பதைக் காண
முடிந்தது; காட்சிகளைக் கண்டு களித்தேன் என்று கூறினேனே-தம்பி!
இயற்கைக் காட்சிகளை மட்டுமல்ல, இயற்கையோடு உறவாடி மகிழ்ந்திடும் இன்முகத்
தோழர்கள், நம்மை எதிர்நோக்கி இருக்கும் இந்தி எதிர்ப்புப்பற்றிக் கொண்டுள்ள
ஆர்வத்தின் அழகையும்தான், என்று கூறவும் வேண்டுமா!

தில்லையில், பல்லாயிரவர் கூடினர்-பொதுக்குழுவின் முடிவுபற்றிப் பேசினோம்-
கேட்டனர்—முழக்கமிட்டனர்—சழக்கர் மனதிலே அதிர்ச்சி ஏற்படும் வகையில்.
மறுநாள் தான், தில்லைக்குச் சில கல் தொலைவிலுள்ள கிள்ளை எனும் கடலோரச் சிற்றூ
ரைத் தொட்டுத் தோழமை கொண்டாடிடும் உப்பங்கழி சென்றோம், தோணியில்.
பிச்சாவரம் காடு என்று அந்த இடத்துக்குப் பெயர் கூறுகின்றனர்.

தம்பி! கடல் நீரின்மீது ஒரு காடு!! அடர்ந்து இருந்தது முன்பு என்பது, இப்
போது ஓரளவு அழிக்கப்பட்டுக்கிடக்கும் நிலையிலும் தெரிகிறது. வேறெங்கும் அதிகம்
காணப்படாததும், உப்பங்கழிகளில் மட்டுமே வளரக்கூடியதுமான, பலவகை மரங்கள்,
கொடிகள் செடிகள், நிரம்பி உள்ளன, ஆலுக்குள்ள விழுதுகள்போல, அந்த மரங்களி
லிருந்து கிளம்பித் தண்ணீரைத் தொடுகின்றன, உள்ளேயும் செல்லுகின்றன. இலை
யிடையே 'திட்டுகள்' உள்ளன; அவை மேய்ச்சலிடங்களாகப் பயன்படுகின்றன. சில
இடங்கள் விரிந்து பரந்து உள்ளன; சில இடங்களிலோ, தோணி நுழையும் அளவு
மட்டுமே, நீர்ப்பரப்பு உள்ளது; விழுதுகளும், கொடிகளும் வழிமறித்து நிற்கின்றன;
வளைத்தும் பிரித்தும், ஒடித்தும் நீக்கியும், வழிகாணவேண்டி இருக்கிறது.

இந்தி தமிழ்மரபு அழிக்கும் செந்தீ

செம்பொத்தும், குருகும், வக்காவும் வண்ணப் பறவைகளும், ஆங்கு தங்கியுள்ளன. இசை எழுப்பும் பறவைகளும் உள்ளன. ஆள் அரவம் கேட்டு மரத்திலிருந்து இளம்பிச் சிறகடித்துக்கொண்டு, வேறிடம் நாடிப் புள்ளினம் பறந்திடும் காட்சி, உள்ளபடி அழகாக இருக்கிறது. வெளிர் நீலவண்ணம் நீர், சூழப் பச்சை, மேலே நீலமும் வெண்மையும் கொண்ட மேகக் கூட்டம், இடையில், வெண்ணிறக் கொக்குகள், விமானப்படை, அணிவகுத்துச் செல்வதுபோல! இதை நீங்கள்மட்டுந்தானா கண்டு களித்திடக் கற்றீர்கள், எமக்கும் தெரியும் என்று கூறுவதுபோல், துள்ளித் துள்ளி மேலே வருகின்றன, மீனினம். எதையும் அழித்திடும் மாந்தர் உளரே என்ற வெறுப்பில், மீண்டும், தண்ணீருக்குள் சென்றுவிடுகின்றன! தரையில் நடக்கமட்டுமே கற்றுக்கொண்ட மனித இனமே! இதற்கே உனக்கு இத்துணை தலைக்கனம் ஏற்பட்டு விட்டதே!! என்போல் நீர்மேல் நடக்கவல்லாயோ என்று கேட்டுக் கேலிசெய்வதுபோல, சின்னஞ்சிறு மீன்கள், துள்ளித்துள்ளி, நீரின்மீது நெடுந்தூரம் செல்கின்றன.

செடி கொடிகளின் மருங்கே, தோணியை நிறுத்தி விட்டு, வலையை விரித்துவைத்து, 'வரவு' தேடிக்காத்திருக்கின்றனர், மீனவர்கள். அவர்கள்கொண்டுவரும் 'அறுவடை'யை அங்காடிக்கு எடுத்துச்செல்ல, கரையிலே அமைக்கப்பட்டுள்ள ஓலைக்கொத்துக் குடிசைகளில், காத்துக்கிடக்கின்றனர், பெண்டிர்! வலைக்கான நூலுக்கு, வகையாக முறுக்கேற்றியபடி, சிறுர்கள் உள்ளனர். தோணிகள் காற்றில் சிக்குவது காண்கின்றனர், கலக்கத்தோடு அல்ல! ஆழ்கடல் சென்று கொண்டுவந்து கொட்டப்படும் மீனினத்தைப் பார்க்கின்றனர், நமது 'வேட்டை' எப்போது ஆரம்பமாகும் என்ற நினைப்புடன்.

நண்பர் இராமசாமியும் 'வேட்டை' நினைப்புடனேதான் இருந்தார்! பிச்சாவரம் சென்றதே, பெரிதும் அவருக்காகத்தான்! நான், முன்பே, சென்றிருக்கிறேன் — வில்லாளனுடன்! இம்முறை நமது நடிப்பிசைப் புலவருக்கு இந்தக் காட்சியைக் காட்ட எண்ணி, நண்பர்கள் வில்லாளன், வேணு, பட்டாபி, சுந்தரம் ஆகியதோழர்கள், தோணிப்பயணம் ஏற்பாடு செய்தனர். கையிலே துப்பாக்கியைப் பிடித்தபடி, கண்களைக் கூர்மையாக்கிக்கொண்டு, குருகுவருமா, வக்கா கிடைக்குமா, மணிப்புரு கிடைக்குமா, செம்பொத்து அகப்படுமா, என்று ஆவலாகத் தேடினர்! புள்ளினம் என்ன மனித இனத்துக்கு மட்டமா!! கிழக்கே இருப்பதைக் கண்டறிந்து இவர் குறிபார்த்தால், அவை, சரேலெனக் கிளம்பி, மேற்குப்பக்கம் சென்று, அடர்ந்த இடம்தேடி அடங்கிவிடுகின்றன!! தோணி அங்கு செல்வதற்குள், அவை, வேறோர் இடம் பறந்துவிடுகின்றன. மெத்தக் கஷ்டப்பட்டு, இரண்டு 'கல்பொத்தி'ப் பறவைகளைச் சுட்டு வீழ்த்தினர், நடிப்பிசைப்புலவர்.

பறவை வேட்டை மட்டுமே ஆடினர், என்றுதான் நான் எண்ணிக்கொண்டேன்; தம்பி! நீயும் அவ்விதம்தான் எண்ணிக்கொண்டிருந்திருப்பாய், ஆனால், அப்போதும் அவர் மனதிலே என்ன எண்ணம் எழுபபிற்று என்பதை, அடுத்த நாள் விழுப்புரம்—செஞ்சி நெடுஞ்சாலையிலுள்ள முட்டத்தூர் எனும் சிற்றூரில் பேசும்போதுதான், என்னால் அறிந்துகொள்ள முடிந்தது.

"இந்தி எதிர்ப்புப்போர் வருகிறது! இதயத்தில் இரக்கமற் எதேச்சாதிகாரிகள், அடக்குமுறையை அவிழ்த்துவிடுவார்கள்; து பாக்கியால் சுட்டுத்தள்ளுவார்கள் என்று அண்ணா தில்லைக் கூ டத்திலே பேசினார். துப்பாக்கிச் சத்தம் எப்படி இருக்கும் என் தெரிந்துகொள்ள, நேற்று எனக்குச் சந்தர்ப்பம் கிடைத்த நானே இருமுறை வேட்டுக்கிளப்பிப்பார்த்தேன், பிச்சாவரம் கா டில்!"—என்று இராமசாமி சொன்னார்.

கவனித்தாயா, தம்பி! கடலோரம் சென்றாலு காட்சிகளைக் கண்டாலும், தோணிநடத்திச் சென் லும் புள்ளினத்தைத் தேடி அலைந்தாலும், எங் இருந்தாலும், எதைச் செய்தாலும், நம்மவர்களி நோக்கம் எதிலே பதிந்து இருக்கிறது, என்பதை கவனித்தாயா!!

தோழர்கள் ஒருவரை ஒருவர் பார்த்துக்கொ ளும் பார்வையிலேயே, இப்போதெல்லாம், ஒரு தனி சுவை இருந்திடுகிறது — உனக்குத் தென்பட்டிருக் வேண்டுமே! "வருகிறது கிளர்ச்சி! பார்ப்போம், உ பங்கு, என் பங்கினைவிடத் தரத்திலும் அளவிலு மிஞ்சுகிறதா, பார்ப்போம்!!"— என்று கண்கள் பே கின்றன.

"மகனே! மகனே! வேளா வேளைக்குச் சாப்பிட கூடாதா! உடம்பு இளைத்தே போய்விட்டதே! என்று கேட்கும், தாயின் பரிவினிலே, இப்போதெ லாம், ஓர் தனி வகை குழைந்து காணப்படுகிறது.

"தடுத்தால் நிற்கவா போகிறான்! தடுப்பதுதா அறமாகுமா? தாய் எனினும் தமிழச்சி அல்லவ மொழி காத்திட, என் மகனும் சென்றான் என் கூறுவதன்றோ மறக்குடியினர் மரபு! கிளர்ச்சியி ஈடுபடும்போது, என்னென்ன ஆபத்து வந் தாக்குமோ, இடுக்கண் யாதோ, யாரறிவார்! எ மகன், இப்போதேனும், உண்டு உரம் பெறுவதை கண்டு மகிழவேண்டுமே! நாளை எப்படியோ!!" என் எண்ணம், தாயின் குரலிலே தோய்ந்து இருக்கிறது

"உனக்கென்னடா, சிங்கக்குட்டி! மனதிற்பட் தைச் சொல்லுகிறாய்—முடிகிறது! அறப்போருக்கு தயாராக நிற்கிறாய்—விடுதலை வீரன்! என்னைச்சொ சேற்றிலே சிக்கிக்கொண்டேன்! மீள முடியவில்லை செய்யுந் தொழிலும், இருக்கும் இடமும், என்னை செயலாற்ற இயலாதவனாக்குகிறது. நீ அறிந் தனைத்தையும் நான் அறிந்து உணருகிறேன்! உ எம் அலைகடலாகிறது! ஆனால்......" என்று ஆ ரத்தெட்டுத் தொல்லைகளில் தன்னைச் சிக்க வைத்து கொண்ட தோழன், விடுதலைக் கிளர்ச்சிக்காக, எல யும் மறந்து, எந்தச் சூழ்நிலையாலும் சிறைப்படாம ஆர்த்தெழும், நண்பனைப் பார்த்துக் கூறுகிறான்- கண்களில நீர் துளிர்த்திடும் நிலையில்.

பொதுமக்களேகூட நம்மை இப்போது பார்க்கு போது, ஏதேதோ கேட்பதுபோலவே, எனக்கு தோன்றுகிறது; உனக்கு எப்படியோ!

"பாவம்! நல்ல பிள்ளைகள்! நாட்டுக்குழைத்திடு நற்பண்பு கொண்டவர்கள். வீட்டை மறந்து, கே களைந்திடும் தொண்டாற்றி வருகிறார்கள். பா மொழியாம் பைந்தமிழ் காத்திட இவரெல்லாம் செ லுங்காலை, சுட்டுத் தள்ளுவரோ, எலும்பொடித் வீழ்த்துவரோ, இழுத்துச்சென்று சிறையிலிட்டு பூட்டுவரோ! யாதோ இவருக்கு நேரிடப்போகு இன்னல்! எனினும், மணப்பந்தல் நோக்கிடு மலர்ச்சியுடன் சென்று கட்டழகியைக் காணத்துடிக்கு

ரளையர் போலன்றோ காணப்படுகின்றனர்' ன்றெண்ணி — ஆயாசமல்ல — அன்புநிறை பார் வையை வழங்குகின்றனர்; வாழ்த்துகின்றனர்.

நெய்தல் நில மக்கள் என்னைப் பார்த்தபோது, நான், இதை உணர்ந்தேன்—உவகையும் கொண் டேன்.

அந்த மக்களுடன் உரையாடியபோதும், அன்று மாலை கிளையிலே பேசியபோதும், இங்கு, அறப் போருக்கு ஓர் அணிவகுப்பு அமைத்திடலாம், என்ற எண்ணம் சுவையூட்டிற்று.

தம்பி! கடலும் கடல் சூழ்ந்த இடமும், நெய்தல் என்றனர், தமிழர். நிலத்தின் இயல்பு கண்டு, பெய ரிட்டனர்; தனிச் சிறப்புக் கண்டு பயன் பெற்றனர். குறிஞ்சி, மருதம், முல்லை, நெய்தல், பாலை, எனும் ஐந்து வகையாக, நிலத்தைப் பிரித்தனர். எப்போது என் கிறாய், தம்பி? ஈராயிரம் ஆண்டுகளுக்கும், முன்பாக!! இன்றுள்ள பல நாடுகள், பெயரற்ற இடங்களாக இருந்த நாட்களில்! இன்றுள்ள பல நாட்டு மக்கள், காட்டில் திரிந்த காலத்தில்!! எத்துணை ஆராய்ச்சித் திறன் இருந்திருக்க வேண்டும், அந்த நாட்களில், இயல்பு கண்டு இடங்களைப் பிரித்து, பெயரிட்டுக் காட்ட!

தம்பி! இத்துணைச் சிறப்புகளும், இன்று எடுத் துக் கூறப்படவேண்டியவைகளாகிவிட்டன. வெளி நாட்டவருக்கோ, இராமாயண மகாபாரதம் தெரிவிக் கப்பட்டிருக்கும் அளவு, தமிழரின் தனிச் சிறப்பான 'திணை இலக்கணம்' அறிவிக்கப்பட்டதில்லை. எங்ங னம் அறிவிக்க இயலும்! தமிழ்மொழியில் உள்ள தனிச் சிறப்புகளை நாம் கூறினால், இன்று வெளி நாட்டவர் கைகொட்டி அல்லவோ சிரிப்பர்! தமிழாம்! தமிழ்! ஐவகை நிலமாம்! அதற்கோர் இலக்கணமாம்! ஆங்கு வாழ்க்கை முறைகள், தனித்தனிச் சிறப்புட னும்! எல்லாம் இயற்கையோடு தழுவியவையாம்! ஏதேதோ கூறுகின்றனர். எனினும், இந்தத் தமிழர், இந்திமொழி கற்றுத் தேறினால் மட்டுமே, பிழைக்க முடியும்—ஆட்சிமொழியாக இருப்பது இந்தி—அழகு பார், அணி பார், அகவலைப்படி அறநூற்களைக் கவனி! என்று பேசி, ஆகப்போவது என்ன! அரசோச்சுவது இந்திமொழி! அதற்கு அடிபணிந்து கிடக்கும் இவர்கள், அகமும் புறமும் பேசி நிற்பது, தோற்றோடி வந்தவன், தன் வாளின்பிடியிலே இழைக் கப்பட்ட ஒளிவிடு கற்களைக் காட்டுவதுபோலன்றோ!— என்று கேட்டுக் கெக்கலி செய்வர்.

கிளைக் கூட்டத்திலே, தம்பி! நான் நெய்தல் நிலம் பற்றிச் சிறிதளவு பேசினேன் — பேசிவிட்டு, கேட்டோரிடை எத்தகைய உணர்ச்சி ஏற்பட்டது என்று கூர்ந்து கவனித்தேன்-திகைத்துக்கிடந்தனர்!!

புலவர்கள் படித்தும் பொருளுரைத்தும், மகிழ் வளிக்கும் பொருளாகிவிட்டது, தமிழரின் அறிவுத் திறத்தின் விளைவுகள் பலவும்.

எனினும், மெள்ளமெள்ள எடுத்தியம்பி, நாம் எப்படிப்பட்டவர், எத்துணை ஏற்றத்துடன் இருந்து வந்தோம், நமது கொற்றமும் குடியும் எத்துணை தர மாக இருந்தன, என்பனபற்றித், தெளிவும், அதன் பயனாக எழுச்சியும் ஊட்டிடமுடியும்-தமிழ் தாழ்நிலைக் குத் தூரத்தப்படாது இருப்பின்! ஆனால், வருகிறதே இந்தி —நமது மரபு அழிக்கும் செந்தீ! அதைத் தடுத்து நிறுத்தா விட்டால், ஏடு பல இருந்து பயன் என்ன!!

மரபு அழிக்கும் சதித்திட்டமாகவே, நாம் இந்த இந்தியைக் கருதுகிறோம்—வெறும் மொழிப் பிரச்சினை யாக அல்ல!

எண்ணங்களை வெளியிடும் கருவி, மொழி, என்று வாதாடுவது எளிது! ஆனால், எண்ணங்கள், உருப் பெற, அவரவர்க்கு, அவரவர் இயல்புக்கு ஏற்ப, வாழும் நாட்டின் தட்பவெட்ப நிலைக்கு ஏற்ப அமையும் மொழியே துணை நிற்கிறது.

அந்தத் தமிழ்மொழி அழிந்துபடாது! அது, மாநிலத்திலே, மாண்புடன் விளங்கும்—தழைக்கும்—மணம் பரப்பும்—என்றுரைப்பார் உளர். அவர்கள் உயரிடமும் சென்று அமர்ந்துள்ளனர். இடம் உயரமே தவிர, அவர்களின் கூற்று மிகமிக மட்டம், என்பதை எடுத்துக்காட்டவா, வேண்டும்.

ஆட்சிமொழியாக இந்தி என்று ஆகிவிட்ட பிறகு எவரும் அம்மொழியிடம் 'பயபக்தி விசுவாசம்' காட்ட முற்படுவரேயன்றி, தமிழா கற்பர்! கற்றதனால் ஆய பயன் என் கொல், பெற்றிட இயலாது எந்த இடமும் என்ற நிலை ஏற்பட்டுவிடும்போது.

ஆட்சிமொழியாக இந்தி புகுந்தால், உலகு, நம்மை, அம்மொழிகொண்டு அளந்திட முற்படுமே யன்றி, அழகு தமிழ்கொண்டா, அறிந்திட முயலும்.

தமிழ் மன்னர்கள் காலத்து 'நாணயங்கள்' இன்று எந்த அங்காடியில் ஏற்றுக்கொள்வர். முன்பு, அந்த நாணயமன்றோ, நாடாண்டது! இன்று ஆராய்ச்சிக்கூடத்திலே, பாடம் புகட்டுகிறது; பழம் பொருட்காட்சிச்சாலையிலே படுத்து உறங்குகின்றது! அந்நிலை தானே, தமிழ் மொழிக்கும், அரசோச்ச, ஆணையிட, அகிலமெலாம் உலாவர இந்தி எனும் வேற்று மொழி இடம் பெறும்போது.

உடல்பெரிது, உள்ளே நுழையும் கிருமி, மிகமிகச் சிறிது! அளவில்! ஆயின் என்ன? உடலை அரித்து அரித்து, கிருமிகள் உயிரையே குடித்துவிடுகின்றன!!

"செம்மொழி, எம் தமிழ் மொழி!"—என்று செப்பிக்கொண்டிருக்கலாம் சின்னாட்கள். பிறகு, "எம்மொழி, ஆட்சி மொழி?" என்று உலகு கேட் குமே? என்ன பதிலளிப்போம்? இந்தி ஆட்சிமொழி என்று கூறிடின், பிறகு, செம்மொழிக்கு எவர் மதிப் பளிப்பர்?

நாவலர்நெடுஞ்செழியன் இந்திமொழியின்இயலாத தன்மையினையையும், தமிழின் தொன்மையினையும், அழகுற எடுத்துச் சொல்கிறார். கேட்போர், ஏறு நடை என்கின்றனர்—அவர் பேசிடும்போது காண் போர், அரிமா நோக்கு என்கின்றனர், அவர் அன் ளித் தரும் சான்றுகளைக் கவனிப்போர், அவரை நடமாடும் பல்கலைக்கழகம் என்று போற்றுகின்றனர். மன்றங்களிலே, மாநாடுகளிலே, அவர் போன்றோர் பேசுங்காலை, தமிழணங்கு கோலமெலாம் காட்டி நம் உள்ளத்தைக் கொள்ளைகொளும் காட்சியே தெரி கிறது.

இந்தி தமிழகத்திலே நுழைக்கப்பட்டால், ஏற் படக்கூடிய ஆபத்தை எடுத்துக் காட்டியும், இந்த இழிசெயலுக்கு உடந்தையாக இருப்போரின் போக் கினை இடித்துக் காட்டியும், மற்றையோர் பேசும் போது, உடல் புல்லரிக்கிறது உள்ளம் பொங்குமாங் கடலாகிறது.

தமிழ் மொழியின் சிறப்பினை, மறுப்பார் இல்லை.

இந்தி மொழிக்கு உள்ள சிறப்புக்கள்பற்றிப் பேசும் துணிவு, இந்தி ஏகாதிபத்தியவாதிகளுக்கே கூட ஏற்படாது.

ஆனால், இந்தப் பெருமை பேசிடின், பிரச்சினை தீர்ந்துவிடுமா? பகற்கனவு! முயற்கொம்பு!!

"தமிழ் எவ்வளவு சிறப்பான மொழி என்பதைத் தமிழனிடத்திலே, தமிழன் எடுத்துச்சொல்லவேண்டி நேரிட்டிருப்பது, அவமானத்தின் அறிகுறி என்றே நான் கருதுகிறேன்."

மூன்றாண்டுகளுக்கு முன்பு, திருவண்ணாமலையில், நாம் நடத்திய, இந்தி எதிர்ப்பு மாநாட்டிலே, நான், இப்படித்தான் பேசினேன்.

ஆட்சிமொழி குறித்து கேர் குழு அமைக்கப்பட்டு அலுவலாற்றிக்கொண்டிருந்த நேரம்.

"இந்தியா ஒரு நாடு அல்ல!" என்ற உண்மையைக் கூறி, டில்லி பாராளுமன்றத்திலே ஓர் அதிர்ச்சி ஏற்படும்படியான முதல் முழக்கத்தைத் தம்பி சம்பத்து எழுப்பிய சமயம்.

1937—38-ல், இந்தி எதிர்ப்பிலே, முன்னணி நின்று கடும்போரிட்ட, கடமை மறவாத காவி தரித்த மறத் தமிழர், அருணகிரி அடிகள் மாநாட்டுக்குத் தலைமை வகித்தார்.

ஏழைக் குடிமகன், இவனுக்குத்தான் எத்துணை அச்சமற்ற போக்கு, என்று எவரும் வியந்துரைக்கும் வண்ணம், மொழி காத்திடும் கிளர்ச்சியில் பணியாற்றி நின்ற, காஞ்சித் தோழர் சி. வி. எம். அண்ணாமலை திறப்பு விழாவாற்றிய மாநாடு.

முதன்முறையாக என்று நினைக்கிறேன், எம்.பி.க்களும், எம். எல். ஏ.க்களுமாகி, நமது கழகத்தவர், வந்தமர்ந்த மாநாடு.

வடநாட்டு வன்கணாளர்கள், இந்தியைப் புகுத்தத் துடிப்பதறிந்து, நாம், முரசு கொட்டக் கூடினோம். அதுபோது நான் பேசியது, இப்போதைக்கும் பொருந்தி இருந்திடக் காண்கிறேன்—எனவே, அதனை எடுத்துக்காட்டி உன் நினைவிற்குக்கொண்டுவருகிறேன்.

இந்தி எதிர்ப்பு மாநாடு இன்றையத்தினம் நாம் நடத்தினோம். நாவலர் நெடுஞ்செழியன் அவர்கள் இந்தி மொழியின் இயலாத தன்மையினையும், தமிழின் தொன்மையினையும், அழகுற எடுத்துச் சொன்னார்கள். வேறு பல நண்பர்கள் இந்தி தமிழகத்திலே நுழைக்கப்பட்டால் நேருகிற பேராபத்தை எடுத்துச் சொன்னார்கள். இவைகளை மட்டும் அலசி ஆராய்ந்துவிட்டு இந்த மாநாடு முடிவடைந்துவிடப்போவதில்லை. இந்த மாநாடு மொழிப்பிரச்சினையை ஆராய்வதற்கு மட்டும் கூட்டப்பட்டதுமல்ல; இந்த மாநாடு தமிழ் மொழி சிலாக்கியமானது என்று எடுத்துச் சொல்லுவதுமல்ல. தமிழ் எவ்வளவு சிலாக்கியமானது என்பதைத் தமிழனிடத்திலே தமிழன் எடுத்துச்சொல்லுவது அவமானத்தின் அறிகுறி என்று என்று நான் கருதுகிறேன்.

தமிழ் மொழி ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்னாலேயிருந்து எத்தனையோ பெரிய படையெடுப்புக்களையும், எத்தனையோ பெரிய தாக்குதல்களையும், எத்தனையோ பெரிய தூற்றுதல்களையும் தாங்கிக்கொண்டு இன்றையதினமும் தனனிகரற்ற நிலையிலே இருக்கிறதென்றால், அந்த மொழி நமக்கு உகந்தமொழிதான்—நமக்கு ஏற்றமொழிதான்—தலைசிறந்த மொழிதான். பாரிலே உள்ள பல மொழிகளிலே தமிழ்மொழி தலைசிறந்த மொழி என்று தமிழன் தமிழர்களுக்கு எடுத்துச் சொல்லிக்கொண்டிருப்பது உண்மையிலேயே சில நேரங்களுக்கு வேண்டுமானால் பொருந்தும். காதல் பேசும் நேரத்திலே கணவன் தன் மனைவியை அருகிலே வைத்துக்கொண்டு 'உன்னைவிட அழகியை உலகத்திலே நான் கண்டதே இல்லை' எனக் கொஞ்சுவான். இப்படிக் கொஞ்சத் தேவையில்லையென்றாலும், கொஞ்சுவதாலே இலாபம் கிடைக்கும் என்பதாலே கொஞ்சுகின்றான். அதே முறையிலே தமிழ்மொழியை இன்றையதினம் கொஞ்சுகிறோமேயொழிய, அத்தகு வாதங்கள் தேவையில்லை. 'என்னுடைய மொழியை விடச் சிறந்த மொழி உலகத்திலே வேறொன்றில்லை' என்று எடுத்துச்சொல்லுகின்ற கடமை, எஸ்கிமோ நாட்டுக்காரனுக்கு இருக்கின்றது. பின்லாந்து நாட்டுக்காரனுக்கு இருக்கின்றது. வளமற்ற மொழிபடைத்தவனானாலும் அவனுக்குச் செம்மொழி தாய்மொழி தான்.

"நமக்குக்கிடைத்திருக்கின்ற தாய்மொழி பிற மொழிகளுடன் ஒப்பிட்டுப் பார்க்கின்ற நேரத்தில், பிற மொழியாளர்களெல்லாம் பார்த்து இவ்வளவு எழிலுள்ள மொழியா உங்களுடையது? இவ்வளவு ஏற்றம்படைத்த இலக்கியமா உங்களிடத்தில் உள்ளது! இவ்வளவு சிறந்த இலக்கணத்தையா நீங்கள் பெற்றிருக்கிறீர்கள்! ஈராயிரம் ஆண்டுக்காலமாகவா இந்த மொழி சிதையாமல் சீர்குலையாமல் இருந்து வருகின்றது? என்று ஆவலுடன் சிலரும், ஆயாசத்துடன் பலரும் பொறுமையோடு சிலரும், பொச்சரிப்பாலே பலரும் கேட்கத்தக்க நல்ல நிலையிலேதான் தமிழ்மொழி இருக்கின்றது. ஆகையினாலே தமிழ் மொழிக்காக—மாநாடுவதற்காக தமிழர் மன்றத்திலே தமிழன் பேசவில்லை. ஆனால் தமிழ்மொழி இருக்கின்ற நேரத்தில் பிற மொழியை நுழைக்கின்ற பேதைமை, தமிழ்மொழி இருக்கின்ற நேரத்தில் பிறமொழியை ஆதிக்கமொழியாக்குகின்ற அக்கிரமம்—இவைகளைக் கண்டித்து அந்த அக்கிரமத்தை நீக்குவதற்கு வழி என்ன என்று உங்களைக் கேட்க இந்த மாநாடு கூட்டப்பட்டிருக்கின்றது. தமிழ்மொழியிலே அகத்திலே என்ன இருக்கின்றது? புறத்திலே என்ன இருக்கின்றது?—என்பதை நாவலர் நெடுஞ்செழியன் அருமையாக நமக்குச் சொல்லிவிடுவார். தமிழ்மொழியிலே பெயர்கள் எப்படியெல்லாம் மாற்றப்பட்டன? என்பதைக் கூற 'ஊரும்பேரும்' எழுதிய பேராசிரியர் சேதுப்பிள்ளை போதும். தமிழ்மொழியிலேயுள்ள இலக்கணச் செறிவுகள் என்னென்ன?—இதற்கு பாரதியார் ஒருவர் போதும்; ஆனால், அதற்காகமட்டுமல்ல; இங்கே இந்த மாநாட்டிலே நாம் கூடியிருப்பது

"இந்த மாநாட்டிலே எடுக்கின்ற முடிவினை இந்த மாநாட்டிலே இந்தியை எதிர்த்தாகவேண்டும் என்று நாம் நிறைவேற்றியிருக்கின்ற தீர்மானத்திற்கு உயிரூட்டம் தரவேண்டுமானால், நீங்களெல்லோரும் 1937-க்கு வருவதற்கு சித்தமாக இருக்கின்றீர்களா? என்று கேட்பதற்கு மாநாடே தவிர, சிலப்பதிகாரத்தை ஆராய்ந்து பார்ப்பதற்கல்ல; கம்பராமாயணத்தினுடைய சுவைகளை எடுத்துச் சொல்வதற்கல்ல; அகத்திலேயும் புறத்திலேயும் உள்ள அணிகளையும் அழகுகளையும் எடுத்து விளக்குவதற்கு அல்ல; அவைகளுக்குத் தமிழ்ப்பெரும் புலவர்கள் போதும்; வகுப்பறைகள் போதும்.

"வெட்டவெளியிலே கொட்டகை போட்டு வீதி தவறுவல் தோரணங்கள் கட்டிச், சிற்றூர்களிலிருந்

ல்லாம் சிங்களீகர்த்த காளைகள் சாரைசாரையாக து இந்த மாமன்றத்தில் கூடியிருப்பதற்குக் ரணம் இந்திமொழியைவிடத் தமிழ்மொழி சிறந்தது ன்று வாதாடுவதற்கல்ல. தமிழகத்திலே இந்தி மாழி திணிக்கப்பட்டால் அதை எந்த வழியிலே ரித்துக்கட்டுவது; அதற்கு நம்முடைய காணிக்கை ன்ன? என்று சிந்தித்து அவரவர்கள் தங்கள் ணிக்கைகளைச் சேர்ப்பிப்பதற்காக இங்கு கூடியிருக் ர்களே தவிர, வெறும் தீர்மானத்தைநிறைவேற்று தற்காக அல்ல.

தமிழர் வளர்ந்திருப்பது தெரிந்தும் வடநாட்டார் ன்றைய தினம் வம்புக்கு வருகிறார்கள் என்றால், ங்களையும் என்னையும் நம்மைப் படைத்த தமிழ் நாட் டையும், தமிழ் நாட்டுக்கு உயிர் நாடியாக இருக்கின்ற மிழ் மொழியையும் துச்சமென்று அவர்கள் கருது ன்றார்கள். நீங்கள் எவ்வளவு வளர்ந்தாலென்ன? லையில்லை; 2,000 கிளைக் கழகங்களா?—வைத்துக் காள்ளுங்கள்; 2 இலட்சம் உறுப்பினர்களா?—இருக் ட்டுமே; நாள் தவறாமல் பொதுக்கூட்டங்களா?— ள்விப்படுகிறோம்! ஊர் தவறாமல் மாநாடா?— ர்த்துக்கொண்டிருக்கிறோம்; உங்களுடைய இயக் த்திலே பத்திரிகைகள் பல இருக்கின்றனவா? இருக்கட்டும—இருக்கட்டும், உங்கள் இயக்கத் லே அழகாகப் பலர் பேசுகின்றார்களா? பேசட்டும் பேசட்டும்; ஆனால் எங்கள் ஆதிக்கம் நிறைவேறும் ன்று அங்கே உள்ளவர் சொல்லுகிறார்கள்.

"இங்கே நாம் ஆயிரமாயிரமாகக் கூடியிருக்கிறோம். நாம் ர்ச்சியடைந்திருக்கிற இந்த நேரத்திலும் நம்மை உண்மை லேயே அடக்கி ஆளவேண்டுமென்று கருதுகின்றவர்கள், ஆதிக்கம் லுத்தக் கூடியவர்கள் இருக்கின்றார்கள் என்றால் அவர்கள் இருக் ற திக்கு நோக்கி நீங்கள் தமிழ்ப் பார்வையைக் காட்டவேண்டும். மிழ்ப் பார்வையிலே குளிர்ச்சியும் உண்டு; கோபக்கனலும் உண்டு. ழன் தன்னுடைய நாட்டையே அர்ப்பணிப்பான், தோழன் என்று பவனுக்கு; தமிழன், தன்னுடைய தாயை மிதித்தவனை அவ டைய தலை தரையிலேபடுகின்றவரை போரிட ஓயமாட்டான் என்பதை முடைய இலக்கியங்களெல்லாம் எடுத்துச் சொல்லுகின்றன.

இன்றைய தினம் வடக்கேயுள்ளவர்கள் இறு ந்து இருக்கின்றார்களே, அவர்களெல்லாம் காடு ளிலே சுற்றிக்கொண்டும், குகைகளிலே வாழ்ந்து காண்டும் மொழியறியாத காரணத்தாலே வாழ்க்கை ழி தெரியாமல் வழுக்கி வீழ்ந்துகொண்டும் இருந்த த்தில், இங்கே அகத்தையும் புறத்தையும் நம் டைய பெரும் புலவர்கள் இயற்றினார்கள். முடி டை மூவேந்தர்கள் இருந்த காலமும், அவர்கள் லத்திலே இயற்றப்பட்ட பெரும் இலக்கியங்களும், ந்த நாளிலே வடநாட்டிலே வங்காளமானாலும் சரி, ஞ்சாலமானாலும் சரி, பண்டித ஜவகர்லால் நேரு னுடைய தாயகமாகப் போற்றப்படுகின்ற காஷ்மீரம் னாலும் சரி, நான் வடக்கே இருக்கின்ற வரலாற்று சிரியர்களைக் கேட்கின்றேன்—அந்த ஈராயிரம் ண்டுகளுக்கு முன்னாலே உங்களுக்கு ஏது மொழி? ங்களுக்கு ஏது இலக்கணம்? உங்களுக்கு ஏது லக்கியம்? உங்களுடைய மொழி எந்த நாட்டிலே சப்பட்டது? ஈராயிரம் ஆண்டுக் காலத்துக்கு முன் லே—தமிழ் வணிகன் ரோம் நாட்டுக் ட வீதியிலே பேசினானே! ஈராயிரம் ஆண் காலத்துக்கு முன்னாலே யவனத்திலல்லவா ன்று வியாபாரம் செய்தான்! ஈராயிரம் ஆண்டுக் காலத்திற்கு முன்னாலே உலகத்தோடு தொடர்பு கொள்வதற்கு எங்கள் தமிழ் மொழி எங்களுக்குப் போதுமானதாக இருந்ததே.

"ஈராயிரம் ஆண்டுக் காலத்துக்கு முன்னாலே அறவழியிலே எங்கள் இனமக்களை அழைத்துச் செல் வதற்கு எங்கள் தமிழ் மொழி எங்களுக்குப் போது மானதாக இருந்தது. பாடி வீடானாலும் சரி, பள்ளி யறையானாலும் சரி, சாலையானாலும் சரி, சோலை யானாலும் சரி, களமானாலும் சரி, எங்கேயும் பயன் பட்டுவந்த இந்தத் தமிழ்மொழி பயன்படாது என்று சொல்லுகின்றவர்கள் எப்படிப்பட்டவர்களாக இருக்கவேண்டும்? அவர்கள் தமிழ் மொழியறியாத காரணத்தால் அப்படிப் பேசுகிறார்கள் என்றால், மன் னித்துவிடலாம் என்றாலும், அவர்களே சிற்சில வேளைகளிலே நம்முடைய முகவாய்க்கட்டையைத் தடவிச் சொல்லுகின்றார்கள். "தம்பி, தம்பி! தமிழ் மொழியை இகழ்வதாகக் கருதிக்கொள்ளாதே, அது மிக நல்ல மொழி. அழகான மொழி, எனக்குப் பேசத்தெரியாதே தவிர, பேசுவதைக் கேட்டிருக் கிறேன். மிக அழகாக இருக்கின்றது" என்று நம்மிடத்திலே சொல்லிவிட்டு, எங்களுடைய மொழி சிலாக்கியமானது என்று சொல்ல வில்லை. எங்களுடைய மொழி இலக்கிய வளமில்லாத மொழிதான். நீங்கள் விரும்பினால் அதை 6 மாதக்காலத்திலே கற்றுக்கொள்ளலாம். ஓராண்டுக் காலத்திலே கற்றுக்கொள்ளலாம். என் றாலும், தமிழ் ஒரு புறத்திலே இருக்கட்டும். இந்தி யையும் ஏற்றுக்கொள்ளுங்கள், இந்திக்கு ஆதிக்கம் தாருங்கள்'—என்று நம்மைப் பார்த்துக் கேட்கிறார் கள்.

"சிலப்பதிகாரக் காலத்திலாவது, கண்ணகி அளிக்கமுடியாத சுகத்தை மாதவி அளித்தாள் என்பதற்காக வழிதவறிய ஒரு வணி கன் மாதவி இல்லத்துக்குச் சென்றான். இங்கு வழிதவறிய கோவ லர்கள் இல்லை; வழிதவறவேண்டுமென்று நினைக்கின்றவர்களும் நீ கட்டிய மனைவி அழகாகத்தானிருக்கின்றாள்; நான் கொண்டுவரு பவள் குணத்திலேயும் குடிகேடி; பார்ப்பதற்கு அருவருப்பாகத்தா னிருப்பாள், இருந்தாலும் எத்தனை நாளைக்குத்தான் அந்தக் கட்ட முகியோடு நீ இருப்பது? அவளைப் பின் அறையிலே தள்ளிவிடு, இவளை நீ முன்கட்டிலே வைத்துக்கொள் என்று கேட்கிறார்கள் என் றால், நாம்கூடச் சும்மாயிருக்கலாம், இங்கே கூடியிருக்கின்ற ஆயிரக்கணக்கான தாய்மார்கள் ஆர்த்தெழவேண்டும்.

தமிழை, தம்பி! தாய்மொழி என்றுதானே அழைக்கிறோம்.

மொழிகாத்திடத் தாய்மார்களை, நான் அழைப் பது முறைதானே!

களத்துக்கு வாருங்கள்! என்று கனிவுடன் அழைத்துவா, தம்பி! சீறிவரும் புலியதனை முறத்தினாலே அடித்துச் சிங்காரமறத்தி ஒருத்தி துரத்தினாளே! என்றன்றோ பாடினார், உடுமலை நாராயணக்கவி. தாய்மார்கள் ஆர்த் தெழுந்தால், தரணியே விழித்தெழுந்து நிற்கும். காணட்டும், அந்த காணற்கரிய காட்சிதனை!

தம்பி! மகனைப் பறிகொடுத்தாலும் மனங்கலங் காத மாதாக்கள் இருந்ததால்தான், தமிழகத்தின் மாண்பு தழைத்தது.

அத்தகைய, மாதர்குல மாணிக்கங்கள், எந் தெந்த நாட்டிலே இருந்தனரோ — இருக்கின்றனரோ —அந்த இடம்யாவும், புனிதம் பெறுகின்றன.

அத்தகைய வீரம், ஏதோ, பழங்கதை, பாடல் சுவடியில் உள்ளவை, என்று ஏமாளிகளும், எதேச் சாதிகாரிகளும் எண்ணிக்கொள்ளட்டும், நீ அறிவாய், உலகிலே பல்வேறு இடங்களிலே கொதித்தெழுந்த படி உள்ள உரிமைக் கிளர்ச்சிகளை அறிந்தவர் அறிவர், அத்தகைய வீரம், பட்டுப்போய்விடவில்லை; தேவைப்படும்போது, கொழுந்துவிட்டு எரியத்தான் செய்கிறது என்பதை.

*

"தாயே! தங்களை—அழைத்துப்போகத்தான் வந்திருக்கிறோம்"

"என்னையா? எங்கு, அப்பா, அழைக்கிறீர்கள்?"

"சுதந்திரவிழாவிலே கலந்துகொள்ள, அம்மையே! அந்த விழா மாண்புபெற, மாதரசி! தாங்கள் வந்து அதிலே கலந்துகொள்ளவேண்டும்."

"விழாவா! விழாக்காணவா அழைக்கிறீர்கள்? என்னையா, அழைக்கிறீர்கள்? அழுதழுது விழிகள் வீங்கிக்கிடக்கும், எனக்கு, அழைப்பா! விம்மி விம்மிச் சாகும் எனக்கு, விழாவிலே பங்கா...?"

"தாயே! தாங்களன்றி வேறு எவர், தகுதி பெற்றவர், சுதந்திரவிழாவிலேபங்குபெற. பதவிக்கும், பட்டத்துக்கும் பட்டடைனத் தீர்த்துக்கொள்ளவும் பல்லிளித்துக் கிடப்போரும், கொள்ளை இலாபமடித்தோரும், கள்ளச் சந்தைக் கழுகுகளும், சமுகச் சனியன்களும், சுதந்திர விழாவிலே கலந்துகொண்டு, அதன் மாண்பினையே மாய்த்துவிடுகின்றனர். மகனை நாட்டுக்காக அர்ப்பணித்து ஒப்பிலாத் தியாகம் புரிந்த மாதர்குல திலகமே! உன் கால்பட்டு, விழா நடக்கும் இடத்தின் மண் மணம் பெறட்டும்! விழா, வீரர்க்கு ஏற்ற திருநாள் ஆகட்டும்! மகனைக் கொன்றனர், மாபாவிகள்! மனமுடைந்து, அணு அணுவாக வேதனை பிய்த்துத் தின்னும் நிலைபெற்று, அந்த மாது, கிடக்கிறாள். உரிமை என்றும் விடுதலை என்றும் பேசித்திரிவோர், அவளைக் கண்டால், ஐயயோ! இவளுக்கு வந்துற்ற கதியன்றோ, நமக்கும் என்று எண்ணிக் கலங்குவர், கதறுவர், விடுதலைப்படையில் சேராதீர் என்று பெற்றெடுத்த மகனுக்கும் உற்றார்கட்கும் கூறுவர்; உடைபட்டுப போய்விடும் அணிவகுப்பு; சிதைந்துபோகும் கிளர்ச்சி;—என்றனரே, பேசுவர். அம்மா! உன் மகன் ஆவியைக் குடித்தது அடக்குமுறை! ஆயினும் அந்த அடக்கு முறை சாகவில்லை. அது செத்தொழிய வேண்டுமானால், தாயே! மகனை இழந்தேன், மனம் கலங்கினேனில்லை. அவன், எதன்பொருட்டுத் தன் இன்னுயிர் ஈந்தானோ, அந்த நோக்கம் ஈடேற, இதோ நானும் புறப்பட்டுவிட்டேன், பாடுபட, போரிட; தேவையானால் மடிந்துபட! வீரனைப் பெற்றவள் நான்; கோழையாகமாட்டேன. தியாகியை ஈன்றவள் நான்; தியாகம் செய்யத் தயங்கமாட்டேன்! — என்று கூறிடுன், தாயே! கொடுமைக்காரர், குலைநடுக்கம் கொள்வர்; கொட்டம் அடக்கப்படும்; வெற்றி நமக்குக்கிட்டும். வேதனையாகத்தான் இருக்கும், மகனைப்பறிகொடுத்த தால். ஆனால், அவன் இறந்தது, நாட்டுக்காக! அதை மீட்டுத்தர வழிகாட்டுங்கள்! சுதந்திரவிழாவிலே, கொடி ஏற்றுங்கள்! தங்கள் திருக்கரம் பட்டாகிலும், தீயோர் தொட்டுத் தொட்டுக் கறைபடிந்துகிடக்கும், அந்தத் துணித்துண்டு, மணிக்கொடியாகட்டும்; மாண்புமீண்டும் கிடைக்கட்டும். வருக! அம்மையே வருக!"

சென்றாள், மாது! கொடி ஏற்றி நின்றாள். கூடி இருந்தோரைக் கண்டாள்—உரையாற்றிய பழக்கமில்லை; அதற்காகப் படித்ததில்லை. உணர்ச்சி மேலிட்டது. ஓரிரு கருத்தை உரைத்தாள்—ஓராயிரம் அறிவாளர் தீட்டிய நூற்களும், அந்தக்கருத்துக்கு மேற்பட்டதைத் தாரா!

> என் மகன், எந்த நோக்கத்துக்காகத் தன் உயிரைத் தியாகம் செய்தானோ, அந்த நோக்கம் வெற்றி பெறப் பாடுபடுங்கள். அவன் செய்த தியாகம் வீணாகிவிடாதபடி பார்த்துக்கொள்ளுங்கள்.

தம்பி! குஜராத் தனி மாநிலமாக இருக்கவேண்டும்; அதனை மராட்டியத்துடன் பிணைத்து ஒரு அவியல் அரசு ஆக்கிவிடக்கூடாது, என்பதற்காக, டில்லி எதேச்சாதிகாரத்தை எதிர்த்து நடத்தப்பட்ட மாபெருங் கிளர்ச்சியிலே, ஈடுபட்டு, அடக்குமுறைக்கு ஆளாகித், துப்பாக்கிக் குண்டுக்கு இரையாகி இறந்து பட்டான், 18 வயது இளைஞன், கல்லூரி மாணவன். இறவாப் புகழ்பெற்ற அந்த இளைஞனை ஈன்றெடுத்த தாயை, குஜராத் அரசு வேண்டி, கிளர்ச்சி நடாத்தியோர், சுதந்திர விழாவில் கொடி ஏற்ற அழைத்துச் சென்ற சம்பவம், மேலே குறிப்பிடப்பட்டிருப்பது.

அந்த வீரமாதேவி, வரலாற்றுச் சுவடிக்குள் புகுந்து கிடப்பவரல்ல! இப்போது, குஜராத்தில் வாழ்கிறார்கள்—வரலாற்றிலே இடம் பெற்றுக்கொண்டார்கள்.

மகன் கொல்லப்பட்டான்—குஜராத் கிடைத்து விட்டது.

என் மகன் செய்த தியாகம் வீண்போகக்கூடாது என்றாள் மாதரசி, வீண்போகவில்லை! அவள் கண்ணெதிரே, குஜராத் பூத்துக் குலுங்குகிறது!

என் மகன் இன்னுயிர் ஈந்தான்—குஜராத் கிடைத்தது—என்று எண்ணும்போதெல்லாம் அந்தத் தாயின், கண்களிலே நீர் துளிர்த்திடும்—ஆனால் அவர்கள் தாளிலே குஜராத் கிடைத்திட உழைத்த உத்தமர்களின், கண்ணீர்படும்!!

தம்பி! இத்தனைக்கும், தனி அரசு அல்ல—இந்தியப் பேரரசிலே ஒரு அங்கமாக இருக்கத்தான்—ஆனால் மராட்டியத்துடன் பிணைக்கப்படாமல் இருப்பதற்காக மட்டுமே, நடத்தப்பட்ட கிளர்ச்சி அ... அதிலே மகனைப் பறிகொடுத்தாள் மாதா!!

நாம் கேட்பது? தனிநாடு என்று மார்தட்டிக் கூறுகிறோம்—மமதையால் அல்ல—மரபு தெரிவதா... அந்த மரபு அழிக்க வருகிறது, இந்தி எனும் செந்...

அண்ணன்,

அண்ணாதுரை

ஏழை பங்காளர்

—[கனகு]—

"மூன்று ஆண்டுகள் நீ பள்ளி ல் தொடர்ந்து படிக்கவில்லையே! தற்கு நீ காட்டிய காரணமும் குந்த காரணம் இல்லையே! நான் ன்னப்பா செய்வேன்? மேல் அதி ரிகளின் உத்தரவு. உன்னைப் ள்ளியிலிருந்து விலக்குவதைத் விர வேறு வழியில்லையப்பா!"

"மூன்று ஆண்டுகள் வேண்டு மன்று நான பள்ளியை விட்டு ங்கி இருந்தேன்! ஐயோ, நான் சால்லிய—காட்டிய காரணங்கள் ன்றும் தகுந்த காரணங்கள் இல்லையா?"

எரிமலையின் உச்சியில் அவன் ன்றுகொண்டிருந்தான். அது மைந்து, புகைந்து வெடித்து ட்டிருந்தது. அது அவன் உள் த்தையும், உணர்வையும் வதைத் துச் சிதைத்துப் பொடித்துக் காண்டிருந்தது உயிரை மட்டும் வர்ந்துகொண்டுபோகவில்லை.

ஐயா, எனக்குப் படிக்கவேண்டு மென்று எத்துணை ஆசை தெரி யுமா? நான் பத்தாம் படிவத்திற் படித்துகொண்டிருக்கும் போது னக்குநேர்ந்த பேரின்னல், என்னை இப்படித் தடுத்து, என் படிப்பில் பாறாங்கல்லைத் தூக்கிப்போட்டு விட்டது ஐயா!

எங்கள் குடும்பம் பெரிய கோட் டைக்குள் வாழவில்லை. உறுதி வாய்ந்த கட்டடத்திற்குள்ளும் உலவவில்லை. காற்று சற்றுப் பல மாக அடித்தாலும் வீழ்ந்து தரை மட்டமாகிப்போகும் ஓலைக்குடிசைக் குள்தான் கிடந்தது. உறுதி சற் றும் இல்லாத அந்த ஓலைக் குடி சையைத் தன் உயிர்கொண்டு தாங்கி நின்றவர் என் தந்தை ஒரு வர்தான் ஐயா!—ஒரு நாள்—நாங் கள் சற்றும் எதிர்பாராத ஒருநாள், பறந்துவிட்டது ஐயா! "உங்க ளுக்கும் எனக்கும் இனி எவ்விதத் தொடர்பும் இல்லை. இனி நீங்கள் து செய்தாலும் நான் கேட்கப் பாவதில்லை. நீங்கள் எத்துன்பத் துக்கு ஆளானாலும் எனக்கு அக் றை இல்லை. உங்கள் பட்டினி ண்டு நான் பரிதவிக்கமாட்டேன். ங்கள் எக்கேடோ கெட்டுப்போங் ள்" என்று எங்களைப் பார்த்துச் சால்லாமற் சொல்லி, எள்ளாமல் எள்ளி என் தந்தையின் உடம்பு மட்டும் எங்கள் முன் கிடந்தது ஐயா!

அப்போது எனக்கு அகவை பதினைந்துதான். உலகம் அறியாத வன் — இன்னும் அதை நான் அறிந்துகொள்ளவில்லை. ஊரைப் பற்றியோ, அதன் நடைமுறை பற்றியோ ஒன்றுமே தெரியாது எனக்கு. அவ்வேளை ஊர் எனக்கு ஊராகத் தென்படவில்லை. அது 'மக்கள்' எனும் மரங்கள் செறிந்த காடாகத் தோன்றியது. அந்தக் காட்டின் நடுவே வறுமைக் காற் றுக்கு அஞ்சி நடுங்கியபடி, வலி வற்ற எங்கள் குடும்பக் குடிசில் தன்னந்தனியாகத் தத்தளித்து நின்றது. அதுதான் சமயமென்று அவ்வறிய காற்றுச் சுழன்று சுழன்று வீசி எங்களை அச்சுறுத் திக்கொண்டிருந்தது. கண்ணுக் கெட்டிய தூரம்வரை யாரையுமே— உதவுவாரைக் காண முடியவில்லை. புயலாக வளர்ந்துகொண்டிருந்த அக்காற்றிலே ஊசலாடி, விழ்ந்து பொடிந்துபோகத் துடித்துக் கொண்டிருக்கும் எங்கள் குடுமபக் குடிசிலைத் தாங்கிப்பிடித்துக்கொள் வார் வேறு யாருமில்லை ஐயா! அந் நிலையில் எப்படி நான் அந்தக் குடி சிலை விட்டுவிட்டு இங்கு வந்திருக்க முடியும்? சொல்லுங்கள். முடிந் திருக்குமா என்னால்?

இந்த மூன்று ஆண்டுகளும் அந் தக் குடிசிலை நான் தாங்கிப்பிடித் துக்கொண்டு வந்தேன். அதைத் தாங்கிப்பிடித்துக்கொள்ள, அது ஏற்றும் பாரத்தைத்தாக்குப்பிடிக்க என்னால் எபபடி முடிந்தது என்று கேட்பீர்கள் அல்லவா? என் தந்தை யார் இறந்த சமயத்தை அடுத்து ஊராட்சி மன்றத்தில் எனக்குக் கிட் டிய வேலைதான் அந்த வகையில் என்பால் உதவியாக நின்றது. இப் போது அந்த வேலைக்கும் இடர் வந்துவிட்டது. பத்தாம் படிவத் தோடு நின்றுகொண்ட நான் அந்த வேலைக்குத் தகுதியற்றவனும். பள்ளியிறுதி வகுப்பில் தேறி இருக்க வேண்டுமாம். நீக்கிவிட் டார்கள் அந்த வேலையிலிருந்து என்னை. இப்போது வேறு வழியே இல்லை ஐயா! எப்படியாவது பள்ளி இறுதி வகுப்பில் தேறியாகவேண் டும் நான். எனக்கு இடம்கொடுங் கள் ஐயா! ஓய்வு நேரத்தில் உழைப் பதன் மூலம் எங்கள் குடும்பத்தை யும் ஒருகையால் தாங்கிக்கொண்டு, இங்கே படிக்கவந்திருக்கிறேன் ஐயா! இரக்கங்காட்டுங்கள்! தயை காட்டுங்கள்! நீங்கள் மனம்வைத் தால் நான் படிக்கமுடியும் ஐயா! என்னைப்பற்றி நீங்கள் எழுதும் சிறு குறிப்பு—ஒரே ஒருவரி--அது நியாயத்துக்கும், நேர்மைக்கும் புறம் பானது அல்ல — என்னைத் தகுதி யுள்ளவனாக்கிவிடும் ஐயா—இந்தப் பள்ளியிற் சேர்ந்து படிப்பதற்கு. பணத்தைப் பெரிதாக நினைக் காதீர்கள் ஐயா! நான் ஏழை என்ப தால் என்னைத் தள்ளிவிடாதீர்கள் ஐயா! எனக்குச் சான்றிதழ் தரு வதற்கு எந்தப் பெரிய மனிதரும் முன்வரமாட்டார், எனக்காகச் 'சிபாரிசு' செய்ய யாருமே இல்லை என்பதற்காக என்னைத் தள்ளி விடாதீர்கள் ஐயா!

"ஐயா, பணத்தைவிட — வெறும் பணத்தைவிட மனம் பெரிது ஐயா— நல்லமனம். எல்லாச் செயல்களிலும், எல்லாவேளைகளிலும் உங்கள் நல்ல மனத்துக்கு வேலை கொடுக்காவிட் டால்போகிறது. என் ஒருவனுக்காக மட்டுமாவது, இந்த ஒரு செயலுக் காக மட்டுமாவது பூட்டிக்கிடக்கும் அந்த நல்லமனதைச் சற்றே திறந்து பாருங்கள் ஐயா! ஐயா, ஐயா!"

"அட சட், நான் சொல்வது உன் காதில் விழவில்லை! பைத்தியமா உனக்கு? மனமாம், பணமாம்!— அதில் நல்ல மனமாம்; தீய மனமாம்! எனக்கு உள்ளது ஒரே ஒரு மனம் தான். அதுதான் நான் இழுத்த இழுப் புக்கெல்லாம் இணக்கம் காட்டி ஈடு கொடுக்கின்ற இரப்பர் மனம். என் னிடம் இரண்டு உள்ளங்களே இல்லை என்றால், நீ இருக்கின்றன என்று அடம்பிடித்துக்கொண்டு நிற்கின் றாயே? போ, போ! யாராவது இரண்டு உள்ளங்கள் உள்ளவரைப் பார்த்துக் கேள். உன் காரியம் ஒரு வேளை அங்கே பலிதமாகும். உம் உம் இடத்தைக் காலி செய். என் பேட்டிக் காக எத்துணையோ மாணவர்கள் எத் துணையோ பெற்றோர்கள் காத்து நிற் கிறார்கள் கையும் பணமுமாக. உம் உம், நகர்ந்துவிடு அப்பால். காலத் தைக் கொல்லாதே! உம்ம்..."

அவன் வெளியேறினான். ஒன்று சேர்க்க முடியாது இனி என்றுமே என்ற கதியில் உள்ளம் உடைந்து கிடந்தது.

அந்தப் பள்ளியில் திரும்பவும் போய்ச் சேர்ந்து கொள்வதற்காக,

அவன் எத்துணை இன்னல்பட்டான் தெரியுமா? — பயனில்லா இன்னல்! அந்த முயற்சியில் அவன் ஈடுபட்ட மூன்று மாத காலத்திற்குள் அந்த ஊருக்கு ஆறு அமைச்சர்கள் வந்து போய் விட்டார்கள். அவர்கள் எல்லாரையும் பார்த்துக் கேட்கத்தான் அவன் துடித்தான். அந்த மக்கள் தொண்டர்களை, ஏழைக்குச் சோறு போடுவதற்காக ஊர் ஊராகச் சுற்றிச் சுற்றி வந்து, அங்கங்கே காணப்படும் பெரிய பெரிய ஆலை அரசர்களோடு, மிட்டா மிராசுகளோடு கூடிக்குலாவி, ஒன்ருக அமர்ந்து நாளொன்றுக்கு ஆறு தடவை விருந்துண்ணும அந்த மக்கள் தொண்டர்களைப் பேட்டி காண்பது அவ்வளவு எளிதான செயலா என்ன? அந்த ஏழையர் காவலரைச் சுற்றிலும் ஊர் காப்பாளர், மெய் காப்பாளராக—ஏவலராக நின்றது ஒரு வளையம். அந்த வளையத்தைத் தாண்டினுல் அடுத்து நின்றது மண்டலத் தொண்டரின் வளையம; —அதைக் கடப்பதோ அரிதினும அரிது. அதைத் தாண்டினுலோ அமைச்சரை ஒட்டிக்கொண்டு நின்றது கூடிக் குலாவும் மிட்டா, மிராசு, மில்களின் வளையம். இவ்வளவையும் தாண்டிக்கொண்டு அந்த ஏழையால் முன்னேறி அமைச்சரைக் காணமுடியுமா இப்போது?—பரபரப்பாகச் சுற்றுலாக்கள் புரிந்துகொண்டிருக்கும் இப்போது? அதற்குஇன்னும் சற்றுத், தேர்தல் நெருங்கி வரவேண்டுமே—மிக நெருங்கி.

அப்படியும் அவன் விடவில்லை. முயன்ருன். இங்கிலாந்து மன்னன் ஒருவன் ஆறு தடவை முயன்று, ஐந்து தடவை தோற்று, ஆருவது தடவை போரில் வெற்றி பெற்ருனுமே, அப்படி இவன் முயன்ருன். ஆருவது தடவை வென்ருன். ஆருவது அமைச்சரைக் கண்டான். செய்தியைச் சொன்னுன் சுருக்கமாக.

"அடடே, அப்படியா செய்தி? உன்னைத் தாராளமாகப் பள்ளியில் சேர்த்துக்கொள்ளலாமே! சேர்த்துக்கொள்வார்களே! — சரி, சரி. நான் சொன்னதாகப் போய்ச் சொல். சேர்த்துக் கொள்வார்கள்!"

பையன் தயங்கினுன்.

"என்னடா, பெரிய இழவாய்ப் போய்விட்டது உன்னேடு! போ; போ! வெளியேறிவிடு சீக்கிரம்! அமைச்சரின் பொன்னுன நேரத்தை எல்லாம் மண்ணுக்கிப் போடுகின்ருயே! போ, போ. வெளியேறிவிடு சீக்கிரம்!" என்று கண் சாடையால் கரித்துக் கொட்டியது முன்னுல் நின்ற மண்டலம்.

"போடா வெளியே! வந்துவிட்டாய் பெரிய கோரிக்கையைத் தூக்கிக்கொண்டு! இங்கே அவன் அவன லைசென்சு வாங்கவும், காண்டராக்ட் எடுக்கவும் ஆலாய்ப் பறந்துகொண்டு நிற்கிருன்! இவன் வந்துவிட்டான் இங்கே, பள்ளியில் சேர்த்துவிடு என்று பல் இளித்துக்கொண்டு! போடானனு!" எனறு சொல்லாமற் சொல்லி, ஓங்கத் துடித்த கையை நீட்டிப் பையனை வெளியே பிடித்து இழுத்தார் அங்கே அருகில் நிறை அந்த வட்டாரத்து—பாரதப் பண்பாட்டு எம். எல். ஏ.

பையன் மசியவில்லை. அப்படியே நின்ருன்—இரண்டில் ஒன்று பார்த்து விடுவது என்று முடிவெடுத்துக் கொண்டு வந்தவன்போல்.

"இந்தப் போலீசுக்காரனுகளுக்கெல்லாம் வரவரப் புத்தி ஏன் இப்படிப் போகிறது? காங்கிரசுக்காரனுக்கும், கண்டவன், நின்றவனுக்கும் வித்தியாசம் தெரியாமல் உள்ளே விட்டுவிடுகிருனுகளே!" என்று உதட்டுக்கு உள்ளே சொல்லிக்கொண்டு முன்னுல் நிற்கும் மண்டலத்தையும், சுற்றிலும் நிற்கும் இரும்புப் பெட்டிகளையும் பார்த்தார் அமைச்சர்.

பையன் அப்படியே நின்றுகொண்டிருந்தான். அவனை எப்படியாவது அனுப்பித் தொலைக்கவேண்டுமே!

"ஏய்யா, எம்மெல்லே! இந்தமாதிரிக் காரியங்களை எல்லாம் நீங்களே செய்து கொடுத்துவிடக் கூடாது? பையன் என்னைத் தேடிக்கொண்டு வந்திருக்கின்ருனே, பாவம். இதோ பாரும். உம்முடைய வேலை இந்தப் பையனைச் சமபளமில்லாமல் பள்ளியில் சேர்த்துவிடுவது தெரியுதா? கையோடு செய்துவிடும் அதை!

"யோவ், மண்டலம்! நீரும்தான். இந்தப் பையன் மிகவும் ஏழைப் பையன்! இவனை ஏழை மாணவர் விடுதியில் சேர்த்துவிடுவது உம்முடைய வேலை. தெரியுதா?

"—நீ போப்பா தம்பி. நாளைக்கே வந்து பார் இவர்களை!"

"நாளைக்கு என்ன! இதோ இப்போதே செய்துவிடலாம்! பள்ளிக்கூட அதிகாரி இங்கேதானே இருக்கிருர். —ஏய்யா, அதிகாரி, இவன் பெயரை எழுதி வைத்துக்கொள்ளு[illegible] நாளைக்கே இவனை 'அட்மிட்' செய்[illegible] விடும் என்ருர் எம். எல். ஏ.

அப்பாடா, பையன் வெளியே[illegible] ருன்.

ஆருவது தடவை வெற்றிவா[illegible] சூடிய இங்கிலாந்து மன்னனைப்போ[illegible] பையன் மகிழ்ச்சியுடன் வெளியே[illegible] ருன். அவனுக்கு மகிழ்ச்சிய[illegible] இருந்ததுபோல் சிரிப்பாகவும் இ[illegible] தது. எப்படியாவது தன்னைப் ப[illegible] யில் சேர்த்துவிடுவார்கள் என்[illegible] மகிழ்ச்சிக்குக் காரணம் என்[illegible] பள்ளி திறக்கவே இன்னும் இர[illegible] வாரங்கள் இருக்கின்றன; இவ[illegible] இப்போதே 'அட்மிட்' செய்[illegible] கிரேும் என்கிருர்களே என்பது [illegible] யின் முன்னிலை.

மறுநாள் மண்டலத்தைக் கா[illegible] பையன் வந்தான். அந்த மண்ட[illegible] இருக்கவேண்டிய இடத்தில் இல்[illegible] வேறு எங்கோ போயிருந்தது. [illegible] திருந்தான் அவன் நெடுநேரம். பி[illegible] கண்ணுக்கும், கருத்துக்கும் எட்[illegible] இடத்திலெல்லாம் அந்த மண்ட[illegible] தைத் தேடிப்பார்த்தான். உ[illegible] எங்குமே காணவில்லை.

மறுநாள் வந்தான் அந்நாளும் மு[illegible] நாள் கதிதான். விடுவாரு பைய[illegible] மறுநாளும், மறுநாளும், மறுநா[illegible] வந்தான்.

ஒரு நாள் இசகு பிசகாக மண்ட[illegible] லத்தைக் கண்டுவிட்டான் பைய[illegible] ஓடினுன் அவரிடம்.

"வாப்பா, வா! ஏன் இத்தனை ந[illegible] வரவில்லை? உனக்காக இரண்டு [illegible] மெனக்கெட்டு எல்லா ஏற்பாடு[illegible] யும் செய்துவிட்டேன். தலைமைய[illegible] யர் முன்னுல் நீ போய் நிற்கவே[illegible] யதுதான் பாக்கி. உன்னை அ[illegible] உடனே அட்மிட் செய்துவிடுவ[illegible] மாணவர் விடுதியிலும் சொ[illegible] வைத்துவிட்டேன். வா வா, [illegible] லாம்! இப்போதே கையோடு எ[illegible] வற்றையும் முடித்துவிடலாம்!"

பையன் மகிழ்ச்சிக்கடலில் மூ[illegible] போனுன். சிறிது தொலைவு நடந்த[illegible] இருவரும். மண்டலம் திரும்[illegible] பார்த்தது. மாணவன் திரும்[illegible] பார்த்தான்.

"யாரோ அங்கே கையலைக்கின்[illegible] களே! யாராக இருக்கும் அ[illegible] ஓகோ, அவரா? அடடே, இப்போ[illegible] தானே நினைக்கு வருகிறது!-மு[illegible] மான வேலையாயிற்றே அதி[illegible] தம்பி; இப்படியே, இங்கேயே நி[illegible] அதோ, அந்தக் கடைவரை [illegible] விட்டு வருகிறேன். சீக்கிரம் [illegible] விடுகிறேன்."

மண்டலம் பின்னுல் திரும்பிவி[illegible] தது.

பையன் அங்கேயே நின்றுகொ[illegible] டிருந்தான்.

★

பொன்னித்தீவின் கன்னித்தெய்வம்

பறந்து சென்றுவிட்டாள். ...த்துமீதேறி அவள் சென்றவழி ...ர்த்தான். சில வீரர்களோடு ...வள் போய்க்கொண்டிருப்பதைப் ...ர்த்தான். கீழே இறங்கி நெடு ...ரம் யோசித்தான. புழுதிக் காற்...ல் சிக்கிய சருகானான். அமைதி ...ன்றி அவன் உள்ளம் அவனை ...ட்டியது. கடைசியில் அவன் ...ள்ளத்தில் ஓர் முடிவு கொண் ...ன், புறப்பட்டான்.

அரண்மனையை அடைந்த தேன் ...மாழிக்கும் அமைதியில்லை. இன் ...ந்தரும் நினைவலைகள் அவள் ...ஞ்சில் மோதின. மலர் தூவிய ...ஞ்சத்தின்மீது படுக்க முடிய ...ல்லை. பட்டுவிரித்த தரைமீது ...க்க முடியவில்லை. மலர்த்தோட ...த்து மணத்தையெல்லாம் வாரி ...ரும தென்றலை எதிர்த்து நிற்க ...டியவில்லை. குளிர்ச்சியைப பொழி ...ம் நிலவைக்காண விருப்பவில்லை. ...ணயினின்றும் தாதியர் எழுப ...ம் இசை அமுதைச் சுவைக்க ...டியவில்லை. என் செய்வாள் ...தையவள்? அலைமீது ஆடும் ...டகானுள்.

தேன்மொழியின் நினைவு அதிக ...னை அதிகமாக வாட்டியது மாம் ...த்தைப் பார்ப்பான். அவனை ...ம் அறியாது நெடுமூச்சு ஓடு ...நம். சிவந்த வானத்தைக் காலை ...ல் சந்திப்பான். அவன் எண் ...ம் அருவியின் அருகே நின்றி ...ந்த ஆரணங்கை நினைவுபடுத் ...ம். மலைகளின இடுக்குகளிலே ...ள்ள தேன்கூடுகளைக் காண ...ன். தேன்மொழியின் நினைவு ...ரும். இப்படிக்காணும் பொரு ...ளல்லாம் அவளை நினைவுபடுத் தவே, வேதனையுற்ருன். தன் நெஞ்சத்து ஆசையை அன்றிரவு நிறைவேற்ற முடிவு கட்டினுன்.

இரவு நடுநிசி. தூக்கம் மறந்த விழியுடைய தேனமொழி நில வில்லா வானத்தில் மின்னும் வைரங்கள் காட்டும் வேடிக்கை களைச் சுவைத்தவாறே மாடியில் நின்றிருந்தாள். அகிற்புகை மணக் கும் அவள் அறையில் அவளன்றி வேறெவரும் இல்லை. அழகுச்சிலை யவள் நினைப்பெல்லாம் காட்டில் கண்ட காளையைபபற்றியதாகவே இருந்தது. "தான் யாரென்று சொல்லிவிட்டு வந்தேதாமெயொழிய,

ப. உ. சண்முகம்

அவர் யாரென்று அறிந்து கொள்ளவில்லையே" என்று அவள நெஞ்சில் பெரும போராட்டமாகவே இருந்தது "அவர் யாராக இருக் கும" என்ற கேள்விக்கு விடை காணத் தன கற்பனையைச் செல விட்ட வண்ணம் இருந்தாள். இறுதியாக நெடுமூச்சுவிட்டவாறே தனபடுக்கை நோக்கி நகர்ந்தாள். மலர்தூவிய மஞ்சத்தில் சாய்ந் தாள். நெஞ்சத்தில் புகை இருக்கும் போது மஞ்சததில் சாய்ந்தால் கண்கள்தான துஞ்சுமோ? தூக்கம் அவள் கண்களைத் தொடமறுத் தது. மலர் தூவிய மஞ்சத்தின்மீது மங்கையவள மனப்போர் நடத்திக் கொண்டிருந்தாள். திடீரென்று "தேன்மொழி" என்ற குரல்கேட்டு அலறி அடித்துக்கொண்டு எழுந் தாள். எதிரில் கானகத்தேகண்ட காளையைக் கண்டாள். கண்களை ஒரு முறை கசக்கிவிட்டுப் பார்த் தாள். அதே உருவம் கண்டாள். நடுக்கத்தோடு நெருங்கினுள். அரும்புமீசையைத் தாங்கும் இத ழில் குறும்புப் புன்னகை தவழக் கண்டாள்.

"நீங்களா?"

"ஆமாம்"

"இங்கு எப்படி வந்தீர்கள்?"

தனக்கு உதவிய நூல் ஏணி யைக்காட்டினுன்.

"என்ன தைரியம்?"

"உன் விழிகள்தான் காரணம்"

"யாராவது பார்த்துவிட்டால்"

"பார்த்தால் என்ன? இளவரசி தான் வரச்சொன்னுர்கள் என்கிறேன்."

"சொல்வீர்கள் — சொல்வீர்கள் ...... ஆமாம், இங்கு எதற்காக வந் தீர்கள்?"

"நீயா இந்தக் கேள்வியைக் கேட் கிருய்? வேதனையால் துடிக்கும் இந்த ஏழை வேறு வழியில்லாத தால் இந்த நள்ளிரவில் உன் அறையினுள் நுழைந்தேன். காணத்துடித்த இந்தக் காந்தச் சிலையை என் விழிகள் கண்டுவிட் டன. அப்பப்பா... இதற்காக இந் தப் பாழும் விழிகள் தூக்கத் தையே மறந்துவிட்டன. சரி...... உனக்குப் பிடித்தமில்லையென்ருல் நான போய்விடுகின்றேன்."

திரும்பினுன்.

"நில்லுங்கள்" என்ருள் தேன் மொழி. அதற்குள் அவள் அறைக் கதவை யாரோ 'தடதடவென்று' தட்டும ஒலிகேட்டது. அதிர்ச்சி யுற்றனர் இருவரும். வீரர்களாகத் தான் இருக்கும் என்பதை யூகித் துக்கொண்டான் அதிகமான். தான் ஏறிவந்த வழியை எட்டிப் பார்த்தான். கீழே சில வீரர்கள் உருவிய வாளோடு நிற்கக்கண் டான். என்ன செய்வதென்று தெரியாது திகைத்தான். தேன் மொழி "வாருங்கள்" என்று

அழைத்துக்கொண்டு வேகமாக நடந்தாள். நிலக்கண்ணாடியை இழுத்தாள். இரகசியவழியொன்று திறந்தது. விளக்கொன்றை அவனிடம் தந்து "இதன் வழியாகத் தப்பிப் போய்விடுங்கள்" என்றாள்.

"நாளை இரவு இதன் வழியாகவே வருவேன்" என்றான்.

"வாருங்கள்" என்றன அவளின் விழிகள். கண்ணாடியை மூடிவிட்டுத் தன் அறைக்கதவைத் திறந்தாள். உருவிய வாளோடு வீரர்கள் சிலர் உள்ளே பாய்ந்தனர்.

"இங்கே ஒரு ஆள் வந்தானா" என்று கேட்டனர். சுற்றித் தேடினர்." இந்த நூல் ஏணி வழியாக ஏறி வந்தானே" என்றான் ஒருவன்.

"அதுவா:..... அது நானதான் வேடிக்கைக்கு இது வழியாக ஏறி இறங்கிப் பார்த்தேன்" என்று சொல்லி நகைத்தாள் தேன்மொழி! வீரர்கள் விடைபெற்றுச் சென்றனர் வெட்கத்தோடு!

பயம் கலந்த இன்ப நினைவுகளோடு இருவரும் இரவு முழுவதும் கழித்தனர். மலர் தூவிய மஞ்சத்திலே மங்கையவள்!... கயிற்றுக் கட்டிலின் மீது காளையவன்! இருவரும் தூங்கின நேரம் மிகக் குறைவுதான். என்றாலும் அந்தச் சிறிது நேரத்தில் கனவுலகில் சந்தித்தனர்! களித்தனர்.

பகற்பொழுதெல்லாம் வேதனையாகயிருந்தது இருவருக்கும். பகலவன் ஆமைவேகத்தில் நகருவதாகக் குறைகூறிக்கொண்டனர். பகற்பொழுது விரைவில் முடியாததற்காகச் சலித்துக்கொண்டனர். காதலர்கள் கட்டளைக்குக் காலம் அடங்கி நடக்குமென்றால் உலகில் பகலவனையே உதிக்காதவாறு சபித்துவிடுவார்கள். அதனால் தான் போலும், இயற்கை தன் கடமைகளைத் தன இயல்பாகவே செயலாற்றுகின்றது. இல்லாவிடில் செயலற்றுப் போய்க்கிடக்கும் இந்நேரம்!

மாலைப்பொழுதும் வந்தது. தேனமொழி தன்னையும் அறியாது பகலவனுக்கு வாழ்த்துக்கூறி, வரவிருக்கும் இரவுக்கு மகிழ்ச்சி தெரிவித்துப் பாட ஆரம்பித்தாள். கமகமக்கும் மலர்த்தோட்டத்து
புகுந்து கலீர் கலீரென்று சதங்
ஒலிக்க ஆடி, வீசும் தென்றலெல்
லாம் தமிழிசை மணக்கச் செ
தாள். இடை இடையே கலக
வெனச் சிரித்தவாறே தாதியை
இளைருவதும், மகிழ்ச்சிப் பெரு
கால் புள்ளிமான்போல் துள்ளுவ
பாய் உள்ள இளவரசியின் பே
கிற்குக் காரணத்தை எவரும் அறி
திலர். மாலைப்பொழுது ஓடி மறை
தது. எதிர்பார்தத இரவு இ
ஓடிவந்தது. தேனமொழி தயா
ளாள். தாதியரை வெளியனுப்
கதவைத் தாளிட்டாள். கண்ணா
கதவைத் திறந்தாள். காளையவ
காத்திருக்கக்கண்டாள்!

நாணம்—அன்பு—ஆசை—இ
பம் இவைகளின் கூட்டுக்கலவை
யாம் மோகனப் புன்னகையை எ
திட்டாள் ஏந்திழையாள்! அவ
கண்கள் பெய்திட்ட காதற்பார்வை
யதைக் கண்ட காளையவனும் மெ
மறந்து சிலையாகிவிட்டான்!

"ஏன்? உள்ளேவர மனமி
லையா?" என்றாள் மலர்பழிக்கு
மேனியாள்.

"அனுமதிதான்எதிர்பார்த்திரு
தேன்" என்றான் ஆணழகன்.

உள்ளே வந்தான்...... சுற்றி
பார்த்தான். எவருமில்லை. எதிரி
நிற்கும் மலர்க்கொடியின் கரம் பற்
முயன்றான். மானவிழி மாதரசி
வள் நகர்ந்தாள்.

"என்ன துணிச்சல்?" என்று
புன்னகையை இதழ்களில் ஏந்தி
வாறே.

"கோழையென்று என்
எண்ணியிருந்தாயா?"

நாணத்தால் தலைகுனிந்திரு
தாள் நகைமுக அழகி. மாற்று
குறையாத பொன்கொண்டு வார்
தெடுத்த தங்கச்சிலைபோல் நிற்கு
நிலவழகியின் தோற்றத்தைத் த
கண்களால் சுவைத்துக்கொண்டே
யிருந்தான். நிலம் நோக்கிக்கிடந்
தாமரை நிமிர்ந்தது. செப்பவ
இதழில் புன்னகை நீந்தி விளை
யாடக் கண்டான். குவளை மல
கண்களில் கவலைபோக்கும் கா
ஒளி கண்டான். கலை அழக
யெல்லாம் பூட்டி நிற்கும் மங்கை
வள் நெற்றிக்குமேல் அலை அ
யாய்ப் படுத்துள்ள கூந்தல் க
டான். ஆனால் அந்தச் செந்
மரை மீண்டும தரைநோக்கிச் சா
திடக் கண்டான்.

நெருங்கினான்— நகர்ந்தாளில்
துடிதுடிக்கும் தன் இதயத்திற்
தானாகவே தைரியமூட்டிக்கொண்
மலர்க்கரங்களை எட்டிப்பிடிக்க நீ

..., தொட்டான் தோகையவள்
லை. இருவர் உடலும் குலுங்
... அன்பிற்கும் உண்டோ
டைக்குந்தாள்! இன்பத்தின்
லைக்கே இருவரும் குடியேறி
டனர்.
அரைத்த பாதாமை அளவோடு
த்துக் கற்கண்டுப் பொடி
விப் பதமாகக் காய்ச்சிய பால்,
ள்ளிச் செம்பு நிறைய இருந்
து. ஏறிட்டுப் பார்த்தனரில்லை.
ம்புகளைக் காட்டிச் சிரிக்கும்
துளையும். மலைத்தேனில்
வைத்த வேர்ப்பலாவும், கதலியும்
கத் தாம்பாளத்தில் இருந்தன
ாளம். திரும்பிப் பார்த்தன
லை. கருத்தொருமித்தோர் கண்
ர் கூடிவிட்டால் வேறெதுதான்
ரியும். வேறெதுதான் சுவைக்கும்!
விடியும் பொழுதை அறிவிக்கும்
வலின் குரல் கேட்டு விரைந்து
ன்ற காலத்தை நொந்து
ாண்டு மீண்டும் மறுநாள் இரவு
திப்பதாக உறுதிபூண்டு பிரிய
மின்றிப் பிரிந்தனர்!
இப்படி இன்ப இரவுகள்
தொடர்ந்து வந்தன. ஒவ்வொரு
ற்பொழுதிலும் தன் காதலனைப்
ற்றிய முழு விபரமும் தெரிந்து
காள்ளவேண்டுமென்று தேன்
மாழி நினைப்பாள். ஆனால் அவன்
திரில் வந்துவிட்டாலோ இப்
வியையே மறந்துவிடுவாள். தவறி
னைவுவந்தால் துணிவுவருவதில்லை.
தரியம் கொண்டால் அவள்
ாயைவிட்டு வார்த்தை வெளி
ருவதற்குள் கன்னத்தில் கனி
ன் முத்திரை ஒன்று அவன்
பாட்டால் போதும், தன்நிலை
றந்துவிடுவாள். இப்படி ஓடின
வர்களின் இரவுகள்.
இதற்கிடையில் வேங்கி நாட்டின்
திபதியான ஆலகாலன் நாட்டைத்
ன் வேட்டைக் காடாக்கி மதுர
ானமும், மங்கையரின் அதரபான
ம் சுவைத்து வந்தான். மயக்கத்
ல் ஈடுபட்டவன் தயக்கமின்றி
தையும் செய்வான் என்பதற்கு
அவனது கொடுமைகளே சாட்சி
ளாகும். அமைதி நிலவ அடக்கு
றைப் பாணங்கள்-எதிர்ப்புக்குரல்
கட்டால் சாவுலகிற்கு ஏற்றுமதி
-வரிதர மறுத்தால் சிறைச்சாலை
-வாய் திறந்தால் சவுக்குழி--கேலி
பசினால் கசையடி—கேள்வி கேட்
ால் சாகடி—இப்படி உத்தரவுகள்
வெளியாகியவண்ணம் இருந்தன.
க்களின் வேதனையைப் பணமாக்
த் தன்விளையாட்டிற்குச் செலவிட்
ான். கண்ணீர் சிந்தாதோர்
இல்லை. கசையடி வாங்காதோர்
குறைவு.

மக்கள் ஊமைகளாகிவிட்ட பின்னர் பாதாளச் சிறையில் அடைபட்டுக்கிடந்த மன்னனின் விழிகளைத் தோண்டி வரும்படி உத்தரவிட்டான். குடிவெறியில் இருந்த ஆலகாலன் தோண்டிவரப்பட்ட கண்களைப்பார்த்துக் காரி உமிழ்ந்தான். காகத்திற்கு உணவாக்கினான். ஆலகாலனின் அமைச்சராக இருந்து இதுபோன்ற பல அரிய யோசனைகளைச் சொல்லி நிறைவேற்றியவன் கார்க்கோடனாகும். கார்க்கோடனின் புதுவிதமான தத்துவ விளக்கங்கள்தாம் ஆலகாலனுக்கு சிறந்ததாகத் தெரிந்தன.

ஆலகாலனுக்கு நாகநாதன் என்றொரு மகன் இருந்தான். தந்தையின் உருவத்தையும் உள்ளத்தையும் பிரதிபலிக்கும் இவன் மணமாகாதவன். இவன் கண்ணில் படும் கன்னியர் எவரும் தப்பியது கிடையாது. இவனது விரகதாபத்திற்கு விருந்தான இளம் பெண்கள் ஏராளம். இவனது கட்டிலறையில் கசங்கிய மலர்கள் ஏராளம். செவ்வாழை வேண்டாம். சிவந்த அதரங்கள் தேவையென்றான். பிள்ளையின் செயல்களைக் கேள்வியுற்றான் ஆலகாலன். அழைத்தான் மகனை. குடிபோதையில் கிடந்த மன்னனால் பேசமுடியவில்லை. கார்க்கோடன் பேசினான்! "பஞ்சத்தில் அடிபட்டவர்களை மஞ்சத்திற்கு அழைக்காதே. நஞ்சிருக்கும். கொஞ்சிட வஞ்சியர் தேவையென்றால் பஞ்சவர்ணக்கிளியாகத் தேடிப்பிடி. உன்னால் முடியவில்லையென்றால் சொல், மங்கை மங்கையாகக்கொண்டுவர உத்தரவிடுகின்றேன். தேவையானதைத் தேர்ந்தெடுக்கலாம்" கார்கோடனின் பேச்சைக் கேட்ட நாகநாதன், "என்னால் முடியாதபோது உமது உதவியை நாடுகின்றேன்" என்று கூறிச்சென்றான்.

நாகநாதனுக்குத் திருமணம் செய்யவேண்டுமென்று விரும்பினாள் அவன் தாய். அதற்கான கால்கோல் விழாவைத் துவக்கினாள் தன் கணவனிடத்தில். அன்றுமுதல் பெண் தேடும்படி கார்க்கோடனுக்கு உத்தரவிட்டான் ஆலகாலன். கார்க்கோடன் வலை வீசத் துவங்கினான் அரண்மனைதோறும். அவனது வலைக்குள் "தேன்மொழியின்" பெயரும் சிக்கியது. வேழநாட்டு வேந்தன் தன் வாரிசுக்காக வளர்த்திடும் அவளை நாகநாதனுக்கு மனைவியாக்கினால் வேழநாடே சீதனமாகக் கிடைக்கக் கூடும் என்று அறிந்தான். கலந்தான் ஆலகாலனிடம். கார்க்கோடன் பாராட்டுதல் பெற்றதோடு பெண் கேட்கத் தூதுவனாகப்போகவும் அனுமதி பெற்றான். புறப்பட்டான்.

(தொடரும்)

THE SCHOOL OF ENGLISH LEARNING

ஆங்கிலக் கல்வி நிலையம்

60, பிராட்வே, மண்ணடி, சென்னை-1.



விவேகத்தின் அத்தாட்சியாக விளங்குவது எழுத்தாளனின் பேனா முனை.
வீரத்தின் சின்னமாகத் திகழ்வது போர் வீரனின் வாள் முனை.
நாட்டின் பாதுகாப்பிற்கு வாளேந்தும் வீரர்கள் தேவைதான். ஆனால், வாளை நம்பிமட்டும் வளமாக வாழ்ந்துவிட முடியாது.
விவேகமற்ற வீரம் ஜீவனற்ற நதியென வரண்டு காணப்படும்.
கத்தி முனை சாதிக்காத காரியங்களைப் பேனா முனை சாதித்துக் காட்டிய வரலாறுகள் பலவுண்டு.
வாள் முனை பிறர் மருட்சியில் மகிழ்வது.
பேனா முனை அனைவர் உள்ளங்களிலும் உவகைக் கிளர்ச்சியை உண்டு பண்ணிப் பூரிப்படைவது.
ஆகவே, விவேகமே வீரத்தைக் காட்டிலும் அதிக பலம் வாய்ந்தது என அறிகிறோம்.
இத்தகைய விவேக பலத்தைக் கொண்டுதான் மனிதன் வாழ்க்கையின் தரத்தில் உயர்ந்தான் என்று சொல்லலா மல்லவா ?

தமிழ் எழுதப் படிக்க தெரிந்தவர்கள்

ஒரே வருடத்தில்

ஓய்வு நேரத்தைப் பயன்படுத்தி அடிப்படையோடு இலக்கண ரீதியாக

இங்கிலீஷ் தபால் மூலம் கற்கலாம்

சேர கடைசி தேதி: 9—7—60 } பயிற்சிகள் ஆரம்பம்: 11-7-60

ஆங்கிலத்தில் கருத்துக்களை அமைத்துச் சொந்தமாக எழுதவும் பேசவும் கட்டுரைகள் வரையவும் கடிதப் போக்கு வரத்துச் செய்யவும் முறையாக அடிப்படையோடு கற்பிக்கப்படும். சிறந்த முறையில் இலக்கணப் பயிற்சி அளிக்கப்படும்.

முக்கிய அறிவிப்பு:— (1) சேர விருப்பமுடையவர் கல்வி நிலையத்திலிருந்து அச்சிட்ட மனுவைப் பெற்றுப் பூர்த்தி செய்து உடனடியாக அனுப்பி வைக்க வேண்டும். (2) 16 வயதிற்கு மேற்பட்டவர்களே சேரத் தகுதியுடையவர்கள். (3) ஆதார பூர்வமான ஒப்பற்ற இலக்கணப் பயிற்சி அளிக்கப்படுவதால், ஓரளவு இங்கிலீஷ் தெரிந்தவர்களும் சேர்ந்து திருத்தமாகக் கற்றுத் தமக்குள்ள சந்தேகங்களைப் போக்கிக் கொள்ளலாம். (4) இங்கிலீஷ் ஓரளவு தெரிந்தவர்களுக்குத் தனியாகவும், எழுத்து முதல் ஒன்றுமே தெரியாதவர்களுக்குத் தனியாகவும் பயிற்சி யளிக்கப்படும். (5) இத் தபால் முறையில் படிக்க ஆண்களும் சேரலாம்; பெண்களும் சேரலாம்.

அச்சிட்ட மனுவையும் முழு விளக்கங்களையும் 8 நயா பைசா தபால் பில்லை அனுப்பிப் பெறுக.

காஞ்சிபுரம், 95, திருக்கச்சிநம்பி தெரு, "திராவிட நாடு" அச்சகத்தில்
ஆசிரியர் (உரிமையாளர்) சி. என். அண்ணாதுரையால் அச்சிடப்பட்டு வெளியிடப்படுகிறது.